# இயேசு அழைக்கிறார்

YESU AZHAIKIRAR - TAMIL MONTHLY - SEPTEMBER 2025
VOL. 23 ISSUE 6 - 28 PAGES - Rs. 21/-

செப்டம்பர் 2025

## உள்ளே...

தடைகளை உடைக்கும் ஆசீர்வாதங்கள்

குடும்பமாய் செழித்திடுங்கள்

பெரிய கனவுகள் இருக்கக்கூடாதா?



**நான் மாம்சமான யாவர்மேலும்
என் ஆவியை ஊற்றுவேன்,
அப்பொழுது உங்கள் குமாரரும்
உங்கள் குமாரத்திகளும்
தீர்க்கதரிசனஞ்சொல்லுவார்கள்**

(அப்போஸ்தலர் 2:17)







# முழு இரவு அற்புத ஜெபத்தில் தேவ மகிமை



முழு இரவு அற்புத ஜெபம் 2025 ஆகஸ்ட் 1ம் தேதி, சென்னை Dr.டி.ஜி.எஸ். தினகரன் நினைவு ஜெப கோபுரத்தில் நடந்தது. அதில் Dr. பால் தினகரனும் அவரது குடும்பத்தினரும் தேவ செய்தியளித்தனர். இந்தியா முழுவதும் 90 ஜெப கோபுரங்களில் இந்த ஜெபம் நடத்தப்பட்டது. சென்னை ஜெப கோபுரத்தில் 1,600 பேர் ஆவலுடன் கூடிவந்தனர். தேசம் முழுவதும் ஏறக்குறைய 6,000 பேர் தங்களுக்கு அருகிலிருக்கும் ஜெப கோபுரங்களில் கூடி ஜெபித்தனர்.

Dr. பால் தினகரன், எசேக்கியேல் 34:26 வசனத்தின் அடிப்படையில், எல்லோர் மேலும் குறிப்பாக குடும்பங்கள்மேல் தேவ ஆசீர்வாதங்கள் பொழியும் என்றும், கூட்டத்தினர் மேல் ஞானம், வளர்த்தி, தயவு ஆகிய தேவ ஆசீர்வாதங்கள் வருகிறது என்றும் தேவ செய்தியளித்தார். பரிசுத்த ஆவியினால் வழிநடத்தப்பட்டு சிலருடைய பெயர்களை அவர் அழைத்து, ஆண்டவர் என்ன செய்கிறார் என்பதையும் கூறினார். அவ்வண்ணமாகவே, சகோ. பால்ஸேயின் செயல்படாத உறுப்புகள் சீர்ப்பட்டன. சகோதரி வத்சலா, மனச்சோர்விலிருந்து விடுபட்டார்கள். சகோ. தினேஷின் மூளையின் நிலை சீர்ப்பட்டது. அநேகர் கட்டிகள், நரம்பு பிரச்னைகள், எலும்பு வலி, மனச்சோர்விலிருந்து குணம் பெற்றதாக சாட்சி கூறினர். தேவ வல்லமை செயல்பட்டதற்கு இவை சாட்சியாக அமைந்தது; அவரது நாமத்திற்கு மகிமையை கொண்டு வந்தது; கூடி வந்தோரின் விசுவாசத்தை பெலப்படுத்தியது.

சகோதரி ஸ்டெல்லா தினகரன், விசுவாசிகள் ஊக்கமாக தேவனை தேடும்படியும், அவரது வாக்குத்தத்தங்களை நம்பும்படியும், இடைவிடாமல் ஜெபிக்கும்படியும் கூறி, சமாதானமும் சந்தோஷமும் தெய்வீக பாதுகாவலும் அவர்களுக்கு உண்டாகும் என்று செய்தியளித்தார்கள்.

சகோ. சாமுவேல் தினகரன், வாலிபர்கள் எதிர்கொள்ளும் பிரச்னைகளை பற்றி பேசினார். அவர்களுக்காக ஜெபிக்கும்படி கூட்டத்தினரை வழிநடத்தினார். Dr. ஷில்பா தினகரன், வாலிபப் பெண்கள் ஆசீர்வதிக்கப்படவும், அவர்கள் வாழ்க்கை தேவனால் மறுரூபமாக்கப்பட்டு, அவருடைய ராஜ்யத்திற்கு வல்லமையான சாட்சிகளாக விளங்கவும் விசேஷமாக ஜெபித்தார்கள்.

சகோதரி இவாஞ்சலின் பால் தினகரன், எல்லா இருதயங்களும் தேவ ஆவியினால் நிரப்பப்படவும், நோய்கள் அகலவும், அசுத்த ஆவிகள் துரத்தப்படவும், குடும்பங்கள், ஜெப கோபுரங்கள், வருங்கால சந்ததியினர் மேல் ஆசீர்வாதங்கள் புரண்டோடவும் ஜெபித்தார்கள்.

இந்தக் கூட்டத்தில் ஜனங்கள் ஆவிக்குரிய எழுப்புதலையும், விடுதலையையும் அனுபவித்தனர். ஆசீர்வாதமான இந்தக் கூட்டத்திற்காக ஜெபித்த, உதாரத்துவமாக நன்கொடை கொடுத்த உங்களுக்கு நன்றி தெரிவிக்கிறோம்.












# மகிழ்ச்சியான செய்தி!

# புத்தம் புதிய இயேசு அழைக்கிறார்

## வாட்ஸ்அப் சேனல்

## தொடங்கப்பட்டுள்ளது...இப்போதே இணைந்திடுங்கள்




**இந்த சேனல் மூலமாக**

* தினசரி தேவனுடைய வாக்குத்தத்தத்தங்களை தமிழ், ஆங்கிலம், தெலுங்கு, ஹிந்தி, கன்னடம் மற்றும் மலையாள மொழிகளில் பெறலாம்
* புதிய வீடியோக்களை, ஆராதனை பாடல்களை, சாட்சிகளை பெறலாம்
* பிரார்த்தனை திருவிழாக்களின் நேரடி ஒளிபரப்பு இணைப்புகளை பெறலாம்
* இயேசு அழைக்கிறார் மின்னிதழை (E-Magazine) பதிவிறக்கம் செய்யலாம்

**QR Code ஸ்கேன் பண்ணி இணைந்துகொள்ளலாம்**

**சென்னையைச் சேர்ந்த குமாரி என்பவரின் சாட்சி**

நான் பயப்படுகிற நேரங்களில் வாக்குத்தத்த வீடியோக்கள் நங்கூரமாக இருந்துள்ளன. இந்த சேனல் மூலமாக பகிரப்படும் சமயத்திற்கேற்ற தேவனுடைய வார்த்தைகள் என்னை மிகவும் தேற்றுகின்றன. தேவனுடைய வார்த்தைகளை பகிருவதற்கு தொழில்நுட்பத்தை எவ்வளவாய் பயன்படுத்துகிறது என்று இயேசு அழைக்கிறார் ஊழியத்திற்கு நன்றியுள்ளவளாய் இருக்கிறேன்.

**சேனல் இணைப்பை பெற்றுக்கொள்ளும் வழிகள்**

VISIT

இணையதளம்:
www.jesuscalls.org/wa

GET CHANNEL LINK

Channel link என்று
98409 99923
என்ற எண்ணுக்கு வாட்ஸ்அப் அல்லது SMS அனுப்பலாம்

எங்கள் வாட்ஸ்அப் சேனலுக்கான அறிவிப்புகளை (NOTIFICATIONS) திறந்து வையுங்கள்; அப்போது எதையும் தவறவிடமாட்டீர்கள்

## டிஜிட்டல் நற்செய்தியாளராகுங்கள்

**வாட்ஸ்அப் மூலமாக ஆண்டவரின் வாக்குத்தத்தங்களையும் செய்திகளையும் பகிருங்கள்**

# தடைகளை உடைக்கும் ஆசீர்வாதங்கள்



அன்பானவர்களே,

உங்கள்மேல், உங்கள் குடும்பத்தின்மேல், வேலை, ஊழியம், உங்கள் வாழ்க்கையின் ஒவ்வொரு நிலையிலும் தேவனுடைய பரிபூரண ஆசீர்வாதங்கள் பொழிவதற்கான நேரம் வந்திருக்கிறது. இந்த ஆண்டுக்கான வாக்குத்தத்தத்தை நினைவுப்படுத்த விரும்புகிறேன்.

"நான் அவர்களையும் என் மேட்டின் சுற்றுப்புறங்களையும் ஆசீர்வாதமாக்கி, ஏற்றகாலத்திலே மழையைப் பெய்யப்பண்ணுவேன்; ஆசீர்வாதமான மழை பெய்யும்" (எசேக்கியேல் 34:26)

நீங்கள் சாபத்தை, இழப்புகளை, வேதனையை, அநியாயமான விமர்சனங்களை, பொய்யான குற்றச்சாட்டுகளை, தடைகளை, பிசாசின் வல்லமையின் கிரியைகளை கண்டு வந்திருக்கலாம். ஆனால், இப்போதிலிருந்து நீங்கள் தேவனுடைய ஆசீர்வாதங்களை அனுபவிப்பீர்கள். இந்த வாக்குத்தத்தம் நிறைவேறுவதற்கான காலம் வந்துள்ளது.

## வீட்டாரின்மேல் ஆசீர்வாதம்

**"தேவனுடைய பெட்டியினிமித்தம் கர்த்தர் ஓபேத் ஏதோமின் வீட்டையும், அவனுக்கு உண்டான எல்லாவற்றையும் ஆசீர்வதித்தார் என்று தாவீது ராஜாவுக்கு அறிவிக்கப்பட்டது"** (2 சாமுவேல் 6:12). தேவன் ஓபேத்ஏதோமையும் அவன் வீட்டையும் ஆசீர்வதித்தார். ஆம், தேவன் நம்மோடு இருக்கும்போது, நம்மை ஆசீர்வதிக்காமல் இருக்க முடியாது. அவருடைய ஆசீர்வாதம் நம்மீதும், நம் குடும்பத்தின்மீதும் வரும். இவ்விதமாக ஆண்டவர் உங்களையும், உங்கள் குடும்பத்தையும் ஆசீர்வதிக்கப் போகிறார்.

தாவீது, தன்னுடைய வீட்டாரின்மேல் தேவனுடைய ஆசீர்வாதம் வரவேண்டும் என்று ஜெபித்தான். **"இப்போதும் உமது அடியானின் வீடு என்றைக்கும் உமக்கு முன்பாக இருக்கும்படி அதை ஆசீர்வதித்தருளும்; ...உம்முடைய ஆசீர்வாதத்தினாலே உமது அடியானின் வீடு என்றைக்கும் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பதாக"** (2 சாமுவேல் 7:29). நீங்களும் இவ்வாறு ஜெபிப்பீர்களா?

## பரலோக தரத்தின் அடிப்படையில் ஆசீர்வாதங்கள்

**"அவர் உன் எல்லைகளைச் சமாதானமுள்ளவைகளாக்கி, உசிதமான கோதுமையினால் உன்னைத் திருப்தியாக்குகிறார்"** (சங்கீதம் 147:14) என்று வேதம் கூறுகிறது. ஆம், தேவன் உசிதமான, முதல் தரமான ஆசீர்வாதங்களை உங்களுக்கு தர விரும்புகிறார். இந்த உலகில் பொருளுக்கு பல்வேறு தரங்கள் உள்ளன.



Dr. Paul Dhinakaran - paul@jesuscalls.org



Pauldhinakaranofficial

ஆனால், தேவன் பரலோக தரத்திலான ஆசீர்வாதங் களை உங்களுக்கு தர விரும்புகிறார். அதுபோன்ற ஆசீர்வாதங்களை உங்களால் இவ்வுலகில் கண்டு பிடிக்கவே முடியாது. இந்த உலகில் நீங்கள் விசேஷித்த வர்களாக காணப்படும்படி, உசிதமான ஆசீர்வாதங் களை தேவன் உங்களுக்குத் தருவார். உங்கள் மூலமாக மக்கள் ஆண்டவரை காண்பார்கள். இப்போதிலிருந்து நீங்கள் உயர்தரமான ஆசீர்வாதங்களை அனுபவிப்பீர் கள் என்று விசுவாசிக்கிறேன்.

## அளவற்ற ஆசீர்வாதம்

''**என் ஆலயத்தில் ஆகாரம் உண்டாயிருக்கும்படித் தசமபாகங்களையெல்லாம் பண்டசாலையிலே கொண்டு வாருங்கள்; அப்பொழுது நான் வானத்தின் பலகணிகளைத் திறந்து, இடங்கொள்ளாமற்போகுமட்டும் உங்கள்மேல் ஆசீர்வாதத்தை வருஷிக்கமாட்டேனோவென்று அதினால் என்னைச் சோதித்துப் பாருங்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்**'' (மல்கியா 3:10). தேவன், உங்களிடம் இருக்கும் பாத்திரங்கள், நிலைப் பேழைகள், அறைகள் போதாத அளவுக்கு ஆசீர்வதிக்கப் போகி றார். இயேசு உங்கள்மேல் வைத் திருக்கும் அன்பினால் அவை கிடைக்கின்றன. அவரை துதியுங் கள். ''அவருடைய பரிபூரணத் தினால் நாம் எல்லாரும் கிருபை யின்மேல் கிருபை பெற்றோம்'' (யோவான் 1:16).

> இந்த உலகில் பொருளுக்கு பல்வேறு தரங்கள் உள்ளன. ஆனால், தேவன் பரலோக தரத்திலான ஆசீர்வாதங்களை உங்களுக்கு தர விரும்புகிறார்

உங்களைக் குறித்து தேவன் இப்படியே விரும்புகிறார். அவர் பிரச்னையின்மேல் பிரச்னை, வெட்கத்தின்மேல் வெட்கம், இழப்பின்மேல் இழப்பு, வியாதியின்மேல் வியாதி, பணக்கஷ்டத்தின்மேல் பணக்கஷ்டம், குற்றச்சாட்டின் மேல் குற்றச்சாட்டு வராமல் உங்கள்மீது ஆசீர்வாதத்தின் மேல் ஆசீர்வாதம் வர வேண்டும் என்று விரும்புகிறார். தேவனையும் அவருடைய நீதியையும் தேடுவோ மானால், மென்மேலும் அதிகமாக கிறிஸ்துவால் நம்மை நிரப்புவார் (மத்தேயு 6:33); ஒன்றன்மேல் ஒன்றாக அவரது ஆசீர்வாதங்கள் வரும்.

*ஜார்ஜ் ஸ்டீபென்சன் எஞ்ஜினை கண்டுபிடிக்க ஆராய்ச்சி செய்து கொண்டிருந்தபோது, அவரது சகோதரி மேரி, ''ஜார்ஜ், இந்த எஞ்ஜின் எப்போது நிற்காமல் ஓடும்?'' என்று கேட்பாள். ஏனென்றால், அது ஓடும்; ஆனால், உடனே நின்றுவிடும். ஒருநாள், அந்த எஞ்ஜின் ஓடத் தொடங்கியது. ஜார்ஜ், ''மேரி, எஞ்ஜின் ஓடுகிறது. ஆனால் நிற்கவில்லை. அதை எப்படி நிறுத்துவது என்று தெரிய வில்லை'' என்று தன் சகோதரியை அழைத்தார்.*

அவ்வண்ணமாகவே, தேவனுடைய ஆசீர்வாத மழை இப்போதிலிருந்து உங்கள் வாழ்க்கையில் பெய்ய ஆரம்பிக்கப் போகிறது; அது ஒருபோதும் நிற்காது.

வேதம், ''**ஈசாக்கு அந்தத் தேசத்தில் விதை விதைத்தான்; கர்த்தர் அவனை ஆசீர்வதித்ததினால் அந்த வருஷத்தில் நூறுமடங்கு பலன் அடைந்தான்; அவன் ஐசுவரியவானாகி, வரவர விருத்தியடைந்து, மகா பெரியவனானான்**'' (ஆதி. 26:12,13) என்று ஈசாக்கை ஆசீர்வதித்தது குறித்துக் கூறு கிறது. தேவன் அவ்வண்ணமாக உங்களை ஆசீர்வதிக்க இருப்பதாகக் கூறுகிறார். இது உங்களுக்கான வேளை. நீங்கள் ஆவிக்குரிய ஐசுவரியத்தில், ஆரோக்கியத்தில், சந்தோஷத்தில், பூமிக்குரிய ஆசீர்வாதங்களில், கனத்தில், உயர்வில் எழும்புவீர்கள். உங்கள் பிள்ளைகள்மேலும் அவர் ஆசீர்வாதங்களை ஊற்றுவார். இந்த ஆசீர்வா தத்தை இயேசுவின் நாமத்தில் உங்கள்மேல் உரைக்கி றேன். ஈசாக்கு துரவுகளை தோண்டியபோது மக்கள் அவற்றை மூட முயன்றார்கள். ஆனால், தேவன் அவன் எங்கெங்கு தோண்டினானோ, அங்கெல்லாம் தண்ணீரைக் கொடுத்து அவனை ஆசீர்வதித்ததினால் மக்கள் அவனுடன் உடன் படிக்கை செய்துகொண்டார்கள். அதுபோல, உங்களுக்கு வரும் ஆசீர்வாதங்களையும் தடுப்பதற்கு மக்கள் முயற்சிக்க லாம்; ஆனால், அவர்களால் முடியாமற்போகும். தேவன் ஒன்றுக்குப் பிறகு ஒன்றாக ஆசீர் வாதங்கள் வரும்படி வாசல்களை திறந்து வைக்கிறார்.

## இந்த ஆசீர்வாதங்கள் எங்கிருந்து வருகின்றன?

உலக தோற்றத்திற்கு முன்னே தேவன் நமக்கென்று ஆசீர் வாதங்களை ஆயத்தம்பண்ணியிருக்கிறார் (எபிரெயர் 4:3). ஆம், உங்களுக்குச் சொந்தமான எல்லா ஆசீர் வாதங்களும் ஏற்கனவே திட்டமிடப்பட்டுள்ளன; உங்க ளுக்காக பரலோகத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன.

*என் தந்தை தன்னுடைய 34வது வயதில் இரத்தமாக வாந்தியெடுத்து மரண தறுவாயில் இருக்கும்போது ஒரு தரிசனத்தைக் கண்டார். அந்தத் தருணத்தில் பரிசுத்த ஆவியானவர், அவரை ஆவியில் பரலோகத்திற்குக் கொண்டுபோனார்; அங்கே ஒரு தேவதூதன் சுருள்களில் எழுதிக்கொண்டிருந்தான். தேவதூதனுக்கு பின்னாக லட்சக்கணக்கான சுருள்கள் கிடந்தன. பரிசுத்த ஆவியான வர், ஒவ்வொரு சுருளிலும் ஒருவருடைய பெயரும், இந்த உலகில் அவர் பிறக்கவேண்டிய நாளும், வாழ்க்கையில் நடக்கும் சம்பவங்களும், நிமிடத்திற்கு நிமிடம் விவரமாக எழுதப்பட்டிருப்பதையும், தேவன் தம்மை அறியக்கூடிய வாய்ப்பை வழங்குவதையும் குறிப்பிட்டிருப்பதாக அவர்க ளுக்கு வெளிப்படுத்தினார்.*

இன்றும் நீங்கள் உங்களுக்கான ஆசீர்வாதங்கள்

பரலோகத்தில் ஏற்கனவே எழுதப்பட்டிருக்கிறது என்று அறிந்துகொள்ளுங்கள். அவை அங்கே மாத்திரம் இருப்ப தில்லை; உங்கள் வாழ்க்கை யில் இப்போது நிறைவேறும்.

**தேவனையும் அவருடைய நீதியையும் தேடுவோமானால், மென்மேலும் கிறிஸ்துவால் நம்மை நிரப்புவார். ஒன்றன்மேல் ஒன்றாக அவரது ஆசீர்வாதங்கள் வரும்**

“**நீங்கள் எதிர்பார்த்திருக்கும் முடிவை உங்களுக்குக் கொடுக் கும்படிக்கு நான் உங்கள்பேரில் நினைத்திருக்கிற நினைவுகளை அறிவேன். அவைகள் தீமைக்கல்ல, சமாதானத்துக்கேதுவான நினைவுகளே**” **(எரேமியா 29:11)** என்று தேவன் கூறுகிறார்.

ஆம், கிறிஸ்துவுக்குள் எல்லா ஆசீர்வாதங்களையும் தந்து நம்மை செழிக்கப்பண்ணுவதே தேவனுடைய திட்டமாகும். “நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம்; அவர் கிறிஸ்துவுக்குள் உன்னதங்களிலே ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தினாலும் நம்மை ஆசீர்வதித்திருக்கிறார்” (எபேசியர் 1:3) என்று வேதத்தில் வாசிக்கிறோம். தேவன், தம்முடைய ஆசீர்வாதங்களுக்குரிய நன்மையான திட்டங்களையெல்லாம் இயேசு கிறிஸ்துவுக்குள் வைத்து அவரை உலகத்திற்கு அனுப்பினார். நம்முடைய நன்மைக்கான தெய்வீக திட்டங்களையெல்லாம் தமக்குள் கொண்ட இயேசு என்ற மனிதனாக தேவன் வந்தார். சுபாவத்தின்படி நாம் தகுதியற்றவர்களாக இருந்தாலும், ஆசீர்வாதங்கள் நம்மைச் சேரும்படி இயேசு தம்மைத் தாமே பலியாக ஒப்புக்கொடுத்தார் (எபிரெயர் 9:28). நாம் தேவனுடைய பிள்ளையாகும்போதுதான் இந்த ஆசீர் வாதங்களை பெற்றுக்கொள்ள முடியும்.

### தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளும்படி நாம் பாவம் நீங்க எப்படி சுத்திகரிக்கப்பட முடியும்?

நாம் மனந்திரும்பவேண்டும்; பாவம் கழுவப்பட்டு தேவனிடம் திரும்பவேண்டும். அது நிறைவேற தேவன் ஒரு வழியை உண்டுபண்ணுவார். அவர் மனிதனாகி, பாவமற்ற பரிசுத்த வாழ்க்கை நடத்தினார். மாம்சமாகிய தேவனாகிய இயேசு, தம்மைத்தாமே பலியாக ஒப்புக் கொடுத்தார். நாம் மன்னிக்கப்படும்படியாக அவரது இரத்தம் சிந்தப்பட்டது.

“**இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும்**” (1 யோவான் 1:7). இன்று இயேசுவிடம் வந்து, “ஆண்டவரே, என் பாவங்கள் எல்லாவற்றையும் மன்னியும்; நான் மனந்திரும்புகிறேன்; என்னுடைய பொல்லாத வழிகளைவிட்டு திரும்புகிறேன்” என்று கூறுங்கள். அப்போது இயேசுவின் இரத்தம் உங்களைச் சுத்திகரிக்கும். பாவ சுபாவத்தை அகற்றும். உங்களை தேவனுடைய பிள்ளையாக மாற்றும். உங்க ளுடைய பழைய சுயம் அகன்றுபோகும். இயேசுவின் இரத்தம் தேவனிடம் மன்றாடி, அவரது திட்டங்களை உங்கள் வாழ்க்கைக்குள் கொண்டு வரும் (எபிரெயர் 12:24). இப்படித்தான் ஆசீர் வாதங்கள் பரத்திலிருந்து மழை போல பொழியும்.

*பூனாவை சேர்ந்த ஹர்ஷ் மோசஸ் மதாங்கரின் சாட்சியை பகிர்ந்துகொள்ள ஆசைப்படுகிறேன். சிறுவயதி லிருந்தே கர்த்தருக்குப் பயப்படும் பயத்தில் அவர் வளர்க்கப்பட்டார். ஆனால் இளம்பருவத்தில், இயேசுவை விட்டு விலகி, மது, போதை மருந்து, புகை பிடித்தல் ஆகிய பழக்கங்களுக்கு அடிமையானார். அவரது வாழ்க்கை யில் இருள் சூழ்ந்தது. மறுவாழ்வு மையத்தில் தங்கியும் மாற்றம் நிகழவில்லை.*

*2023 நவம்பர் 17ம் தேதி, நண்பர்களுடன் பட்டாசு வெடித்தபோது, ஒரு பட்டாசு, அவரது முகத்தில் வெடித்தது. அவர் பலத்த காயமுற்றார்; பார்வை இழந்தார்; மூக்கிலி ருந்து இரத்தம் கொட்டியது. மருத்துவமனைக்குக் கொண்டு சென்றார்கள். நான்கு நாட்கள் அங்கு சுயநினைவில்லாமல் இருந்தார். மருத்துவர்கள் அவரது இடது கண்ணை அகற்றவேண்டியிருக்கும் என்று கூறினார்கள். இந்த நேரத்தில் அவரது தாயார் இயேசு அழைக்கிறார் ஜெப கோபுரத்தை தொடர்புகொண்டார்கள். அவரது சகோதரி Dr. பால் தினகரனுக்கு மின்னஞ்சல் அனுப்பினார்கள். மறுநாள் அவரது தாயாரும் சகோதரி யும் தீவிர சிகிச்சை பிரிவுக்கு வந்து ஹர்ஷ் மோசஸிடம், Dr. பால் தினகரன் அவருக்காக ஜெபித்து, “நானே உன் பரிகாரியாகிய கர்த்தர்” (யாத்திராகமம் 15:26) என்ற வசனத்துடன் பதில் அனுப்பியிருப்பதாக கூறினார்கள். அந்த வசனம் அவர் மனதை தொட்டது. ஆண்டவர், தம்மிடம் மனந்திரும்பும்படி கிரியை செய்தார். அவரது பாட்டி இளம் பங்காளர் திட்டத்தில் அவரை இணைத் தார்கள்.*

*அற்புதவிதமாக அவரது இடக்கண் சுகமானது. 40 நாட்களில் அவரது முகமும் பார்வையும் பூரணமாக சீர்ப்பட்டன. மருத்துவர்கள் ஆச்சரியப்பட்டனர். பழைய நண்பர்கள் அவரை கைவிட்டனர். ஆனால், இயேசு அவருக்கு சிறந்த நண்பரானார். தற்போது முழு நேர ஊழியத்திற்கு ஒப்புக்கொடுத்துள்ளார். 2024 செப்டம்பர் மாதம் ரூத் என்ற தேவனுக்கு பயந்த பெண்ணை திருமணம் செய்தார். ஆண்டவர் இயேசு அவரை மன்னித்தார்; சுகமாக்கினார்; அவரது வாழ்வை முழுமையாக மாற்றினார். இன்று அவரும் அவர் மனைவியும் ஆண்டவருக்கு ஊழியம் செய்து, அவரது அன்பைக் குறித்து அனைவருக்கும் சாட்சியாயிருக் கின்றனர்.*

தேவன், ஹர்ஷ் மோசஸ் மதாங்கரை ஆசீர்வதித்தது போல உங்களையும் மறுரூபப்படுத்துவார்; ஆசீர்வ

திப்பார். பரிசுத்த ஆவி நம்மேல் ஊற்றப்பட்ட பிறகு ஆசீர்வாதங்கள் வரும்; தேவ ஆவியினால் ஆசீர்வாதங்கள் வரும் என்று வேதம் கூறுகிறது (ஏசாயா 32:15). உங்கள் வாழ்க்கை வனாந்தரம்போல காணப்படலாம். ஆவியானவர் வரும்போது அது செழிப்பான புல்வெளியாக, காடாக மாறும். "**பரியாச உதடுகளினாலும் அந்நிய பாஷையினாலும் இந்த ஜனத்தோடே பேசுவார்**" (ஏசாயா 28:11). தேவ ஆவியானவர், உங்கள் வாழ்க்கையில் ஆசீர்வாதங்கள் வரும்படி, அவரது சித்தத்தை பேசுவதற்கான புதிய பாஷைகளை கொடுப்பார். உங்கள் சூழ்நிலைகளைக் குறித்து, துக்கம், மனச்சோர்வு மற்றும் தோல்விகளைக் குறித்து நீங்கள் பேசமாட்டீர்கள்.

தேவன் தமது ஆவியினால் உங்களை நிரப்பும்போது, உங்களுக்கு அருளவேண்டுமென்று முன்பே அவர் தீர்மானித்த ஆசீர்வாதங்களை உங்கள் வாழ்க்கையின்மேல் உரைப்பார். நீங்கள் திரளான ஆசீர்வாதங்களை பெறுவீர்கள்.

"**நாம் வேண்டிக்கொள்ளுகிறதற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் நமக்குள்ளே கிரியைசெய்கிற வல்லமையின்படியே, நமக்குச் செய்ய வல்லவராகிய அவருக்கு**" (எபேசியர் 3:20) என்று வேதம் கூறுகிறது. தேவன் தம் பிள்ளைகளுக்கு அவற்றை வாக்குப்பண்ணுகிறார். "**தாகமுள்ளவன்மேல் தண்ணீரையும், வறண்ட நிலத்தின்மேல் ஆறுகளையும் ஊற்றுவேன்; உன் சந்ததியின்மேல் என் ஆவியையும், உன் சந்தானத்தின்மேல் என் ஆசீர்வாதத்தையும் ஊற்றுவேன்**" (ஏசாயா 44:3). நீங்கள் பரிசுத்த ஆவியானவர்மேல் தாகமாயிருந்தால், தேவனிடம் கேட்டால், அவர் உங்களை நிரப்புவதோடு, உங்கள் பிள்ளைகளையும் நிரப்புவார். ஆசீர்வாதங்கள் உங்கள் சந்ததியின்மேல் பெருக்கெடுக்கும்.

> தேவன் தமது ஆவியினால் உங்களை நிரப்பும்போது, உங்களுக்கு அருளவேண்டுமென்று முன்பே அவர் தீர்மானித்த ஆசீர்வாதங்களை உங்கள்மேல் உரைப்பார். நீங்கள் திரளான ஆசீர்வாதங்களை பெறுவீர்கள்

சமீபத்தில் டெல்லியிலிருந்து ஒரு தேவ ஊழியர் என்னோடு பேசினார். "என்னுடைய சபையில் 8,000 பேர் இருக்கிறார்கள். இப்போது ஒரு கூட்டம் நடத்தினேன். அதற்கு 1 லட்சம் பேர் வந்தார்கள். 2010ம் ஆண்டு நீங்கள் தீர்க்கதரிசன மாநாடு நடத்தினீர்கள். அப்போது நான் கால் சென்டரில் வேலை பார்த்துக்கொண்டிருந்தேன். ஆண்டவரை என் இரட்சகராக ஏற்றுக்கொண்டேன். மாநாட்டில் கலந்துகொண்டு பரிசுத்த ஆவியைப் பெற்றேன். தீர்க்கதரிசன ஜெப பயிற்சியில் பரிசுத்த ஆவியின் வரங்களுடன் வல்லமையாய் ஊழியம் செய்ய நீங்கள் பயிற்றுவித்தீர்கள். அன்று ஒவ்வொருவருக்கும் தனியாக 10 நொடி செலவழித்து ஜெபித்தீர்கள். எனக்காக ஜெபித்தபோது, "உங்கள் மூலம் பல்லாயிரம் போதகர்கள் எழுப்பப்படுவார்கள்" என்று கூறினீர்கள். ஊழியத்தைக் குறித்து நினைக்கவில்லை. ஆனால், ஆண்டவர் என்னை பரிசுத்த ஆவியாலும் அவரது வரங்களாலும் நிறைத்தார். இன்று பெரிய சபையைக் கட்டி, அவருக்கு ஊழியம் செய்ய வைத்திருக்கிறார். இப்போது நான் உலகமெங்கும் தேவ வார்த்தையை பகிர்ந்துகொள்ள பயணிக்கிறேன்." தேவன் அதே கிருபையை உங்களுக்கும் தருவாராக. நீங்கள் ஆயிரக்கணக்கான மக்கள்மேல் ஆசீர்வாதத்தைக் கொண்டுவருவீர்கள்.

## தேவ ஆவியானவர் கொண்டு வரும் ஆசீர்வாதங்கள் எவை?

"**இயேசுவானவர் ஞானத்திலும், வளர்த்தியிலும், தேவ கிருபையிலும், மனுஷர் தயவிலும் அதிகமதிகமாய் விருத்தியடைந்தார்**" **(லூக்கா 2:52)**

பரிசுத்த ஆவியானவர் உங்களுக்குள் வந்ததும் இப்படியே நடக்கும். தேவன், பரலோகத்தை திறந்து, ஞானத்தையும் வளர்த்தியையும் தேவ தயவையும் மனுஷர் தயவையும் அடையும்படி தமது ஆவியை உங்கள்மேல் ஊற்றி ஆசீர்வதிப்பார்.

## ஞானத்தை அருளும் தேவ ஆவியானவர்

தேவ ஆவி, ஞானத்தை உங்களுக்குத் தந்து புத்தியையும் வெற்றியையும் அடையும்படி வழிநடத்துவார். "**ஞானத்தையும் உணர்வையும் அருளும் ஆவியும், ஆலோசனையையும் பெலனையும் அருளும் ஆவியும், அறிவையும் கர்த்தருக்குப் பயப்படுகிற பயத்தையும் அருளும் ஆவியுமாகிய கர்த்தருடைய ஆவியானவர் அவர்மேல் தங்கியிருப்பார்**" (ஏசாயா 11:2). நாம் அவரை சார்ந்துகொள்ளும்போது, தேவனுடைய சித்தத்தை அறிந்து அதன்படி நடக்க செய்வார். தேவன் உங்களை இன்னும் உயர்த்துவார். யோசேப்பின், தானியேலின் தேவன் இன்றும் ஜீவிக்கிறார். நீங்கள் இக்கால யோசேப்பாக, தானியேலாக விளங்க முடியும். இயேசுவின் நாமத்தில் ஞானத்தில் எழும்புங்கள். தெய்வீக ஆசீர்வாதமான ஞானத்தின் ஆவியானவர் இப்போதே உங்கள்மேல் வருகிறார்.

## தயவை அருளும் தேவ ஆவியானவர்

அன்பானவர்களே, நன்றாக நிர்வாகம் செய்து மனுஷர் தயவை அடையும்படி தேவன் தமது தயவை உங்களுக்கு தருவார்.

என் தந்தை மறைந்த பிறகு, பரிசுத்த ஆவியானவர் எனக்கு ஒரு விசேஷித்த தரிசனத்தை கொடுத்து, தேசங்களுக்கு, ராஜாக்களுக்கு, மக்களுக்கு, பாஷைக்காரருக்கு தீர்க்கதரிசனம் உரைக்கும்படியான ஆவியை எனக்குள் வைத்தார். அவரது வழிநடத்துதல்படி நாங்கள் புதுடெல்லி

யில் தேசிய ஜெப கோபுரத்தையும், ஜெருசலேமில் இஸ்ரேல் ஜெப கோபுரத்தையும், இந்தியாவிலும் உலக மெங்கும் நூற்றுக்கணக்கான ஜெப கோபுரங்களையும் ஸ்தாபித்துள்ளோம்.

தேவன் காருண்யா பல்கலைக்கழகத்தைக் குறித்தும் பேசினார். ''தண்ணீர், உணவு, ஆரோக்கியம், ஆற்றல் ஆகிய நான்கு முக்கிய துறைகளில் காருண்யா கவனம் செலுத்தட்டும். இவற்றின் மூலமாக மனிதர்களின் பிரச்னைகளுக்கு தீர்வுகளை கொண்டுவரட்டும்'' என்று கூறினார்.

இன்று ஆராய்ச்சியில் காருண்யா முக்கியமானதாக எழுந்துள்ளது. மாணவர்களுக்கு உயர்ந்த வேலைகள் கிடைக்கின்றன. தயாரிப்புகள் உருவாக்கப்படுகின்றன; காப்புரிமைகள் பெறப்படுகின்றன; ஆராய்ச்சி இதழ்கள் வெளியிடப்படுகின்றன. தேவன், காருண்யாவுக்கு A++ என்ற உயரிய தரச்சான்றை கொடுத்தார்.

காருண்யா கிறிஸ்தவ CBSE பள்ளியில் மாணவர்கள் தேவ வல்லமையாலும் ஞானத்தாலும் நிரப்பப்படுகின்றனர். மற்ற மருத்துவமனைகளால் கைவிடப்பட்ட நோயாளிகள் காருண்யா மருத்துவமனையில் சுகப்படுத்தப்படுகின்றனர்; அற்புதங்களின்மேல் அற்புதங்கள் நடக்கின்றன. அறுவை சிகிச்சைகள் வெற்றிகரமாக நடக்கின்றன. உயிர்கள் காப்பாற்றப்படுகின்றன. தேவ ஞானத்தினாலும் பரிசுத்த ஆவியானவரின் வழிகாட்டுதலினாலும் இவை நடக்கின்றன. இந்த ஞானத்தின் ஆவியானவர் இப்போதே உங்கள்மேல் வருகிறார்.

சீஷாவின் மூலம் ஏழைப் பிள்ளைகளின் தேவைகளை, கணவரால் கைவிடப்பட்ட பெண்களை, முதியோர் இல்லத்தில் இருப்பவர்களை, மாற்றுத்திறனாளிகளை, வீடற்றவர்களை, ஆலயத்திற்கு கட்டடம் இல்லாத போதகர்களை கவனிக்கவேண்டிய முக்கியத்துவத்தையும் தேவன் எனக்குக் காண்பித்தார். நாங்கள் எங்களால் முடிந்த உதவிகளை செய்ய தொடங்கினோம் (ஏசாயா 58:7,8). அதன்பிறகு தேவன் இயேசு அழைக்கிறார் ஊழியத்தை வல்லமையாக ஆசீர்வதித்தார். இன்று இயேசு அழைக்கிறார் பங்காளர்கள் அனைவரும் இளம் பங்காளர் திட்டம், குடும்ப ஆசீர்வாத திட்டம், வேலை ஆசீர்வாத திட்டம், வணிக ஆசீர்வாத திட்டம், ஜெப கோபுர கட்டுமான நிதி, பெதஸ்தா ஆதரவாளர்கள், டி.வி. ஆதரவாளர்கள் திட்டம் மூலமாக ஆசீர்வாதங்களை பெற்றுவருகின்றனர். மற்றவர்களின் கண்ணீரை துடைக்க உதவுவதால் அவர்கள் கண்ணீர் துடைக்கப்படுகிறது.

பல லட்சம் மக்களை அவரது வல்லமையினால் முன்னோக்கி நடத்துவதற்கு தேவன் ஞானத்தையும் தயவையும் தருகிறார். இதே ஆவியானவர் உங்கள் குடும்பத்தின்மேலும், வேலையின்மேலும், ஊழியத்தின் மேலும் வருகிறார்.

## வளர்த்தியை தரும் தேவ ஆவியானவர்

**''இயேசுவானவர் ஞானத்திலும், வளர்த்தியிலும், தேவ கிருபையிலும், மனுஷர் தயவிலும் அதிகமதிகமாய் விருத்தியடைந்தார்''** (லூக்கா 2:52) என்ற வசனம் கூறுவது போல, தேவ ஆவியானவர் உங்களை வளர்த்தியாக்குவார்.

இன்றைக்கு நீங்கள் ஒருபொருட்டாக இல்லாததுபோல உணரலாம்; தேவன் உங்களை பொருட்படுத்தத்தக்கவராக மாற்ற விரும்புகிறார். பரிசுத்த ஆவியானவர் என்மேல் வந்தபோது, நான் சரீரபிரகாரமாக 5'3'' உயரமே இருந்தேன். அதன்பிறகு 6 அடி உயரமாக வளர்ந்தேன். முக்கியமாக கல்வியில், சமுதாயத்தில், ஆவிக்குரியவிதத்தில் அவர் எனக்கு அந்தஸ்தைக் கொடுத்தார். நான் களிமண்தான். என்னுடைய சொந்த பெலத்தினால் அல்ல; ஆனால் தேவ கிருபையினாலும் பரிசுத்த ஆவியானவரின் வல்லமையாலும் அதைக் கொடுத்தார். ஆம், தேவன் உங்களுக்கு வளர்த்தியைக் கொடுப்பார். உங்கள் பெயருடன் தமது நாமத்தை இணைப்பார். ''நான் உன்னைப் பெரிய ஜாதியாக்கி, உன்னை ஆசீர்வதித்து, உன் பேரைப் பெருமைப்படுத்துவேன்; நீ ஆசீர்வாதமாய் இருப்பாய்'' (ஆதியாகமம் 12:2) என்று அவர் கூறுகிறார்.

தேவன் உங்களோடு இருப்பதால், தேவ தயவையும் மனுஷர் தயவையும் பெற்றிருப்பீர்கள் என்று வேதம் வாக்குப்பண்ணுகிறது. அவருடைய தயவினால் மக்கள் உங்களோடு நிற்பார்கள். நிரம்பி வழியும் இந்த ஆசீர்வாதம் உங்கள்மேல் வருகிறது. தேவன் உங்கள் கண்களைத் திறப்பார். ஞானத்தைத் தருவார். உங்கள் வாழ்க்கை உயரும். உங்கள் நாமம் ஆசீர்வதிக்கப்படும். தேவன்தாமே தமது ஞானத்தினால் உங்களை வழிநடத்துவார். ''நான் உனக்குப் போதித்து, நீ நடக்க வேண்டிய வழியை உனக்குக் காட்டுவேன்; உன்மேல் என் கண்ணை வைத்து, உனக்கு ஆலோசனை சொல்லுவேன்'' (சங்கீதம் 32:8).

இந்த ஊழியத்தோடு இணைந்து நின்று, ஜெப கோபுரங்களை தாங்கி, அவற்றுக்காக ஜெபித்து இயேசு அழைக்கிறார், காருண்யா பல்கலைக்கழகம், சீஷா ஆகிய ஸ்தாபனங்களுக்கு உதாரத்துவமாய் கொடுத்து தேவனை கனம்பண்ணுங்கள். தேவ ராஜ்யத்தை கட்டுவதற்கான உங்கள் அழைப்பை நிறைவேற்றுங்கள்.

அன்பானவர்களே, தேவனுடைய ஆசீர்வாத மழை உங்கள்மேல் பொழிகிறது. ஞானத்தின் ஆவி, தயவு உங்கள்மேல் வந்து, அவருடைய வாக்குத்தத்தங்கள் நிறைவேறி, உங்கள் வாழ்க்கையிலும் எதிர்கால சந்ததியின் வாழ்க்கையிலும் புரண்டோட ஆயத்தமாக இருக்கிறது. வாழ்க்கையின் எல்லா பகுதியிலும் நீங்கள் எழும்புவீர்கள். விசுவாசத்தோடு இவற்றைப் பெற்றுக் கொள்ளுங்கள். தேவனுடைய பரிபூரணம் வாழ்வின் எல்லா பகுதிகளிலும் விளங்குவதை காணுங்கள். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.

# வணிக ஆசீர்வாத திட்டத்தில் இணைந்திடுங்கள்

**தேவனின் ஜெய களஞ்சியத்தினுள் பிரவேசியுங்கள்**



"கர்த்தர் யோசேப்போடே இருந்தார், அவன் காரியசித்தியுள்ளவனானான்; அவன் எகிப்தியனாகிய தன் எஜமானுடைய வீட்டிலே இருந்தான்"
ஆதியாகமம் 39:2



## எதிர்பார்த்ததற்கு மேலான செழிப்பு

நான் குறுநிதிநிறுவனம் ஒன்றில் பணியாற்றி, என் குடும்பத்துடன் திருப்தியாக வாழ்ந்து வந்தேன். அந்த நிறுவனம் திடீரென மூடப்பட்டது. நான் வேலையை இழந்தேன். செய்த இன்னொரு வேலையில் தோல்வியடைந்தேன். ரியல் எஸ்டேட் தொழிலில் பெரும் நஷ்டம் ஏற்பட்டது. எட்டு மாதங்கள் வேலையில்லாமல் இருந்தேன்; கடன் ஏற்பட்டது; மனவுளைச்சல் வந்தது. ஆகவே, மது அருந்தினேன்; தற்கொலை எண்ணங்களும் துரத்தின. இயேசு அழைக்கிறார் கடப்பா பிரார்த்தனை திருவிழாவின்போது பரிசுத்த ஆவியானவரால் வழிநடத்தப்பட்டு Dr. பால் தினகரன், என் பெயரை சொல்லி அழைத்து, திரும்ப தருவதைக் குறித்த தேவ வாக்குத்தத்தத்தை கூறினார். நான் வணிக ஆசீர்வாத திட்டத்தில் சேர்ந்தேன். புதிய, வெற்றிகரமான வணிகத்தை தந்து தேவன் என்னை ஆசீர்வதித்தார். என் கடன்கள் எல்லாவற்றையும் அடைத்தேன். இஸ்ரேல் ஜெப கோபுரம் உள்பட இயேசு அழைக்கிறார் ஊழியத்தை தாங்கவும் உதவினார். இயேசுவுக்கே சகல மகிமையும் செலுத்துகிறேன். - ஆமோஸ், கடப்பா, ஆந்திர பிரதேசம்.

**உங்கள் வணிகத்தை நீங்கள் தேவனுடைய கரங்களில் அர்ப்பணிக்கும்போது சகோதரர் ஆமாஸைபோல அவர் உங்களையும் செழிக்கப்பண்ணுவார்.**

வணிக முதலாளிகள், தொழில்முனைவோர், தொழிலதிபர்களுக்காக மன்றாடுவதற்காக Dr. பால் தினகரனுக்கு கொடுக்கப்பட்ட தெய்வீக தரிசனம்தான் வணிக ஆசீர்வாத திட்டம். தெய்வீக வளர்ச்சி, நன்மையான தாக்கம், ஆசீர் வாதம் பெறும்படி தங்கள் வணிகத்தை அர்ப்பணித்து தேவ ராஜ்யத்தின் பங்காளர்களாகும்படியான அழைப்பாகும்.

உங்கள் கடை, நிறுவனம், வர்த்தகம் அல்லது புதிதாக ஆரம்பித்த நிறுவனத்தை இத்திட்டத்தில் சேர்ப்பது பெரிதான நன்கொடையாகும். அது விசுவாச உடன்படிக்கையாகும். உங்கள் நிறுவனத்திற்காக தேவன்மேல் நீங்கள் நம்பிக்கை வைப்பதால்,

* உங்கள் கைகளின் பிரயாசத்தை ஆசீர்வதிப்பதாக (ஏசாயா 65:22)
* ஈசாக்கைபோல நூறுமடங்கு ஆசீர்வாதத்தை அளிப்பதாக (ஆதியாகமம் 26:12)
* உங்கள் கையின் பிரயாசத்தை சமாதானத்துடன் சாப்பிட செய்வதாக (சங்கீதம் 128:2)
* ஒரு மனிதனும் பூட்டக்கூடாதபடி வாசலை திறப்பதாக (வெளிப்படுத்தல் 3:8) அவர் வாக்குப்பண்ணுகிறார்.

**வணிக ஆசீர்வாத பங்காளருக்கான சிலாக்கியங்கள்:**

- Dr. பால் தினகரன் அல்லது அவரது குடும்பத்தினருடன் நேரடியாக அல்லது காணொலி மூலம் ஜெபக் கூட்டம்
- அர்ப்பணிப்பு கொண்ட ஜெப வீரர்களின் அனுதின ஜெபம்
- 24 மணி நேர சங்கிலி ஜெப குழுவினரின் ஜெப உதவி
- ஆண்டு பொதுக்குழு கூட்டம், வர்த்தக விவாதம், பேச்சுவார்த்தை மற்றும் முக்கிய முடிவுகளை எடுக்கும் நேரங்களில் பிரார்த்தனை
- இந்தியா முழுவதும் உள்ள இயேசு அழைக்கிறார் ஜெப கோபுரங்களில் மாதாந்திர வணிக ஆசீர்வாத கூட்டங்கள்
- வணிகத்தில் வழிகாட்டுவதற்கு விசேஷித்த தீர்க்கதரிசன பார்வையும் ஜெபமும்
- இயேசு அழைக்கிறார் கூட்டங்களில் பிரத்தியேக இருக்கைகள்

**பங்காளராக நீங்கள் ஆயத்தமா?**

☐ நான் ரூ.................... ☐ ஆண்டுதோறும் ☐ மாதந்தோறும் ☐ மற்றவிதத்தில் நன்கொடையாக அளிக்க விரும்புகிறேன்.

நன்கொடை அனுப்பும் விவரங்களை இந்த இதழின் 16ம் பக்கத்தில் காணலாம்.

இணையதளம்: www.jesuscalls.org/bbp

நன்கொடை வழங்க QR Codeஐ ஸ்கேன் செய்யவும்.




# குடும்பமாய் செழித்திடுங்கள்

**அன்பானவர்களே, ''கர்த்தர் உங்களையும் உங்கள் பிள்ளைகளையும் வர்த்திக்கப்பண்ணுவார்'' (சங்கீதம் 115:14) என்ற வசனத்தின்படி, தேவன் இந்த மாதம் உங்களையும் உங்கள் குடும்பத்தினரையும் ஆசீர்வதித்து செழிக்கச்செய்ய விரும்புகிறார்.**

குடும்பமாய் வர்த்தித்தல் என்பது, ஸ்திரமாகவும் வசதியாகவும் வாழ்வது மட்டுமல்ல, தேவனிடமிருந்து வரக்கூடிய தெய்வீக பெருக்கத்தின் மத்தியில் வாழ்வது மாகும். தேவனுடைய வார்த்தையை அஸ்திபாரமாகக் கொண்டு கட்டப்பட்டுள்ள, அவருடைய சமுகம் விளங்கு கிற, அவருடைய வாக்குத்தத்தங்களை நம்புகிற, அவரு டைய ஆசீர்வாதங்களை பகிர்ந்துகொள்கிற வீட்டில்தான் உண்மையான செழிப்பு தொடங்கும். தேவனுடைய ஆசீர்வாதங்கள் தனி நபர்களுக்கு மட்டுமல்ல, வீட்டார் அனைவருக்கும், சந்ததிகளுக்கும், அவற்றோடு தொடர்பில் இருக்கிற சமுதாயத்திற்கும் கிடைக்கும் என்ற நிச்சயம் வேதவாக்கியங்களில் அடங்கியிருக்கிறது.



தேவன், உங்களைக் குறித்து பெருக்கத்தின் அடிப்படையிலேயே யோசிக்கிறார். அவர் உங்களுக்கும் உங்கள் குடும்பத்தினருக்கும் திட்ட மிட்டு வைத்துள்ள ஆசீர்வாதங்கள் எண்ணிலடங்காதவை (சங்கீதம் 40:5). வறியவனாகவும் தேவைகள் மிகுந்தவனாகவும் மேய்ப்பனாகவும் இருந்த தாவீது, தேவன் தன்னைக் குறித்து யோசிப்பதை எண்ணி களிகூருகிறான். முக்கியமில்லாமலிருந்த அவன் வாழ்க்கை தெய்வீக கவனத்தால் ராஜரீகமாக மறுரூபமாக்கப்பட்டது. தேவன் தம் கரத்தை ஒரு குடும்பத்தின்மேல் வைக்கும்போது அது மறுரூபமாகும். தங்களை தேவனுடைய திட்டத்திற்கு அர்ப்பணித்த குடும்பத்தின் முடிவு, ஒருபோதும் சிறுமை, போராட்டம், தேக்கம் என்பவையாக அமையாது.

சந்ததிக்கு ஆசீர்வாதம் அளிக்கும் தேவனுடைய முறைமைக்கு வேதாகமம் முழுக்க ஆதாரங்கள் உள்ளன. ''உங்கள் தகப்பனாகிய ஆபிரகாமையும், உங்களைப் பெற்ற சாராளையும் நோக்கிப்பாருங்கள்; அவன் ஒருவனாயிருக்கையில் நான் அவனை அழைத்து, அவனை ஆசீர்வதித்து, அவனைப் பெருகப் பண்ணினேன்'' (ஏசாயா 51:2) என்று கர்த்தர் நினைவு றுத்துகிறார். ஆபிரகாமை மட்டும் ஆசீர்வதிப்பது தேவனுடைய நோக்கமல்ல; அவனது வம்சத்தின் மூலம் தேசங்களை தொடுவதே அவரது நோக்கமாகும்.

EvangelinePaulDhinakaran | evangeline@jesuscalls.org

ஆபிரகாமின் சந்ததி மூலம் பூமியிலுள்ள அனைத்து தேசங்களும் ஆசீர்வதிக்கப்படுமென்று தம்முடைய தரிசனத்தை தேவன் விரிவுபடுத்துகிறார் (ஆதியாகமம் 22:17,18).

அதே வாக்குத்தத்தம் இன்றைக்கும் நமக்காக இருக்கிறது. ஒரு குடும்பம் மாத்திரம் அனுபவிப்பதற்காக தேவன் ஆசீர்வாதத்தை கொடுப்பவரல்ல; மாறாக, பெருகுவதற்காக, நன்மையான தாக்கத்தை ஏற்படுத்துவதற்காக கொடுக்கிறார். ஆபிரகாமைபோல, நீங்கள் ஆசீர்வாதத்தை பெறுவதற்கு மட்டுமல்ல, மற்றவர்களுக்கு அதைக்கொண்டு செல்கிறவர்களாகவும் இருக்கும்படி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளீர்கள். உங்கள் நடுவில் வரும்படி தேவனை நீங்கள் அழைக்கும்போது, பிள்ளைகள், வீட்டார் மற்றும் உங்களோடு தொடர்புடைய அனைவரும் தெய்வீக ஆசீர்வாதத்தினுள் பிரவேசிக்க முடியும்.

ஜாண் என்ற அன்பு சகோதரர், தன் வாழ்க்கையைக் குறித்த சாட்சியை பகிர்ந்துகொண்டார். காலை முதல் இரவு வரை மது அருந்திக்கொண்டே இருக்குமளவுக்கு அவர் குடிப்பழக்கத்திற்கு அடிமையாக இருந்தார். குடித்திருக்கும்போது, ஆடை அணிந்திருக்கிறோமா இல்லையா என்றே அவருக்குத் தெரியாது. இந்த நிலையிலிருந்த அவருக்கு, அவரது குடும்பத்தினர் திருமணம் செய்து வைத்தனர். ஆனாலும் அவர் தொடர்ந்து குடித்துவிட்டு சண்டை போட்டுக்கொண்டே இருந்ததால், அவருடைய மனைவி அவரைவிட்டுப் பிரிந்து சென்றுவிட்டார்கள். ஆகவே, இன்னும் அதிகமாகக் குடித்து, படுத்தப் படுக்கையானார். இந்த நிர்க்கதியான நிலையில் ஒருவர் அவரை சென்னை, வானகரத்திலுள்ள ஜெப கோபுரத்திற்கு அழைத்து வந்தார். அங்கே ஜெப வீரர்கள் அவருக்காக ஜெபித்து ஆலோசனை கொடுத்தார்கள். அவர் தொடர்ந்து ஜெப கோபுரத்திற்கு வர ஆரம்பித்தார். அதே ஆண்டு அவருடைய மனைவி திரும்பவும் அவரோடு சேர்ந்து வாழும்படி வந்தார்கள். ஆண்டவர் அவர்களுக்கு முதலில் ஒரு ஆண் குழந்தையையும், பின்பு ஒரு பெண் குழந்தையையும் கொடுத்து ஆசீர்வதித்தார். இப்போது அவர் மதுப்பழக்கத்திலிருந்து முற்றிலும் விடுதலையடைந்திருக்கிறார். அருமையான குடும்ப வாழ்க்கை வாழ்கிறார். ஒரு வேலையில் சேர்ந்திருக்கிறார். அதோடு சொந்தமாக தொழிலும் செய்கிறார். நம் தேவன் எவ்வளவு நல்லவர் பாருங்கள். ஒரு தருணத்தில் உடைந்துவிடுவதுபோல் இருந்த அவரது குடும்பம், தற்போது செழிப்பாக, பிள்ளைகளால் ஆசீர்வதிக்கப்பட்டதாக, ஸ்திரமானதாக உள்ளது. தேவன், தனி மனிதர்களை மட்டுமல்ல, குடும்பம் முழுவதையுமே சீர்ப்படுத்துகிறார் (நீதி. 3:33). நீதிமானின் வீடு, ஜெபமும் தாழ்மையும் தேவ வார்த்தையும் நிறைந்ததாக இருக்கும்போது ஆசீர்வாதம் நிரம்பி வழியும். சுவர்களைக் கொண்ட ஸ்தலம், பரிசுத்தமானதாக மாறுகிறது. மூன்று மாதம் உடன்படிக்கை பெட்டி இருந்தபோது, கர்த்தர் ஓபேத்ஏதோமையும் அவன் வீட்டார் அனைவரையும் ஆசீர்வதித்தார் (2 சாமுவேல் 6:11). அப்படியே கர்த்தர், அவரது சமுகத்தை நாடும் குடும்பத்தையும் ஆசீர்வதிப்பார்.




தேவனை உங்கள் வீட்டுக்குள் அழைக்கும் இந்த விஷயம், எளிமையானதாக இருந்தாலும் ஆற்றல்வாய்ந்தது. அவரது வார்த்தை உங்கள் இருதயங்களில் அதிகமாக தங்கியிருக்கட்டும். தாழ்மையாக இருங்கள். இப்படி நன்றியுடன் இருப்பது ஆசீர்வாதத்தின் பலகணிகளை திறக்கும். தாவீதின் ஆட்சியின் மூலம், ஒட்டுமொத்த தேசத்தையும் ஆசீர்வதிப்பதற்காக, மேய்ச்சல் வெளியிலிருந்து சிங்காசனத்திற்கு தேவன் அவனை உயர்த்தினார்.

செழிக்கின்ற குடும்பமானது தேவனுடைய தயவில் நடப்பதாகவும், அவருடைய நோக்கத்தைப் பகிர்ந்துகொள்வதாகவும், அவரது வார்த்தையின்படி ஜீவிப்பதாகவும் இருக்கும். அது, உலகப்பிரகாரமான ஆஸ்திகள் மற்றும் வெற்றிகளின் அடிப்படையில் மட்டுமல்ல, சமாதானம், ஒற்றுமை, சந்தோஷம் மற்றும் ஆவிக்குரிய வளர்ச்சி இவற்றின் அடிப்படையில் அளவிடப்படும். புதிய ஏற்பாட்டில் மார்த்தாளின் வீடு, இயேசுவுக்கு எப்போதும் திறந்தே இருந்தது; அதனால் தெய்வீக தரிசனத்திற்கான இடமாக இருந்தது. தேவன் வாசம் பண்ணுவதற்கு வீட்டில் இடம் கொடுத்தால் இல்லறம் இனிதாக மாறும்.

அன்பானவர்களே, கர்த்தரை உங்கள் வீட்டைக் கட்டும்படி அனுமதியுங்கள் (சங்கீதம் 127:1). உங்கள் வீடு செங்கற்களால் கட்டப்பட்டதாக இருந்தாலும், தேவ ஆவியானவர் வாசம்பண்ணும் இடமாக விளங்கட்டும். குடும்பத்தில் ஒருவர் விசுவாசித்தால், ஆசீர்வாதமானது, சுகமாக்குதலின் நதியாக, சீர்ப்படுத்துதலின் நதியாக பாய்ந்து அனைவரையும் மறுரூபமாக்கும்.

தேவனோடு நடப்பதை நீங்கள் தெரிந்துகொள்ளும்போது, உங்களுக்கு மட்டுமல்ல, உங்கள் பிள்ளைகளின் பிள்ளைகள் வாழ்விலும் பெருக்கத்தை எதிர்பார்க்கலாம். உங்கள் குடும்பத்தார்மேல் ஜீவனை உரைத்திடுங்கள். தேவ வார்த்தையால் அதை நிரப்பிடுங்கள். நீதிக்கு முன்னுரிமை கொடுங்கள்; துக்கத்திற்கு மேலாக ஆராதியுங்கள்; பெருமிதத்திற்கு மேலாக தாழ்மைப்படுங்கள். அப்போது, தாவீதைபோல், "கர்த்தராகிய ஆண்டவரே, தேவரீர் என்னை இதுவரைக்கும் கொண்டுவந்ததற்கு, நான் எம்மாத்திரம்? என் வீடும் எம்மாத்திரம்?" என்ற அனுபவத்தைப் பெறுவீர்கள்.

குடும்பமாக செழிப்பது தொலைதூர கனவல்ல; இப்போது சாத்தியமாவதாகும். ஆண்டவர்தாமே உங்களுக்கும், உங்கள் பிள்ளைகளுக்கும், உங்கள் வீட்டாருக்கும் உங்களைச் சார்ந்த எல்லாற்றிலும் பெருக்கத்தை அருளிச்செய்வாராக. உங்கள் வீடு, ஒரு வீடாக மட்டுமின்றி, தேவன் வாசம்பண்ணும் ஸ்தலமாக, அவரது ஆசீர்வாதங்கள் குன்றாமல் விளங்கும் இடமாக அறியப்படட்டும்.

# திரு. லட்சுமணின் வாழ்க்கையை குடும்ப ஆசீர்வாத திட்டம் எப்படி மறுரூபமாக்கியது?




## குறைவிலிருந்து கொடுக்கும் அளவுக்கு



நான் வேலையில்லாமல் இருந்தேன். என் குடும்பத்துக்கு வேண்டியவற்றை என்னால் கொடுக்க முடியவில்லை. விரக்தியில் இயேசு அழைக்கிறார் ஜெப கோபுரத்திற்குச் சென்று தேவனிடம் முறையிட்டேன். அங்கு ஒரு ஜெப வீரர் எனக்காக ஜெபித்த பிறகு ஏதோ ஒன்று மாற ஆரம்பித்தது. குறுகிய காலத்திலேயே எனக்கு ஆரம்பப் பள்ளி ஒன்றில் அரசு வேலை கிடைத்தது. என் இருதயம் நன்றியால் நிறைந்தது. இயேசு அழைக்கிறார் குடும்ப ஆசீர்வாத திட்டத்தில் இணைந்தோம். தேவன் எங்களை ஆசீர்வதிக்க தொடங்கினார். பண நெருக்கடி அகன்றது. முதல் குழந்தை பிறந்த பிறகு பிசாசின் காரணமாக என் மனைவிக்கு பல முறை கரு கலைந்தது. வேதனை மிகுந்த அந்தச் சூழலில் ஔரங்காபாத்தில் நடந்த இயேசு அழைக்கிறார் பிரார்த்தனை திருவிழாவுக்கு மிகுந்த எதிர்பார்ப்போடு சென்றோம். சகோதரி இவாஞ்சலின் ஜெபித்துக்கொண்டிருந்தபோது, ஒரு கரிய உருவம் என் மனைவியை விட்டு அகன்றது. அவள் தெய்வீக சந்தோஷத்தாலும் சமாதானத்தாலும் நிரப்பப்பட்டாள். குறுகிய காலத்திலே அவள் மறுபடியும் கருவுற்றாள். தேவன் ஆரோக்கியமான ஆண் குழந்தையை எங்களுக்குக் கொடுத்தார்.

இப்போது எங்களுக்கு ஒரு மகனும், ஒரு மகளும் இருக்கிறார்கள். தேவன் எங்களுக்கென்று ஒரு வீட்டையும் கட்டியிருக்கிறார். அற்புதவிதமாக அண்டைவீட்டார் மத்தியில் எங்கள் வீட்டில் மட்டும் சுவையான குடி தண்ணீர் இருக்கிறது. அவர்கள் எங்கள் வீட்டுக்கு வந்து தண்ணீர் எடுத்துச் செல்கிறார்கள். எங்களை சுற்றிலுமிருக்கிறவர்களுக்கு தேவன் எங்களை ஆசீர்வாதமாக வைத்திருக்கிறார். தேவனுக்கே துதியுண்டாவதாக.

- லட்சுமண், ஔரங்காபாத், மகாராஷ்டிரா.

நீங்களும் இந்த தெய்வீக திட்டத்தில் இணைந்து ஆண்டவருடைய ஊழியத்தை தாங்கினால் சகோதரர் லட்சுமணை போல, எதிர்பார்க்கிறதைவிட மேலான ஆசீர்வாதங்களை பெற்றுக்கொள்ளலாம்.

தாவீது ராஜாவைப்போல நீங்கள் தேவனுடைய வேலையை தாங்கும்போது, தாவீதின் சந்ததியை ஸ்திரப்படுத்தியதுபோல தேவன் உங்கள் குடும்பத்தையும் திடப்படுத்துவார். இயேசு அழைக்கிறார் குடும்ப ஆசீர்வாத திட்டம் தேவ பிரசன்னத்தையும், சமாதானத்தையும், ஆசீர்வாதத்தையும் உங்களுக்கு அளிக்கும்.

நீங்கள் உதாரத்துவமாக இந்த ஊழியத்தை தாங்கும்போது தேவன் உங்கள் சந்ததியை ஆசீர்வதிக்க உண்மையுள்ளவராயிருப்பார்.

**குடும்ப ஆசீர்வாத திட்ட பங்காளருக்கான சிலாக்கியங்கள்:**

* உங்கள் நன்கொடை ரூ. 5,000/- எட்டியதும் உங்கள் குடும்பத்துக்கான விசேஷித்த வாக்குத்தத்தம் அடங்கிய சான்றிதழை பெறுவீர்கள்
* ஆண்டுதோறும் உங்கள் திருமண நாளன்று எங்கள் ஜெப வீரர்கள் தொடர்புகொண்டு ஜெபிப்பார்கள்.

நீங்களும் ◆ மாதந்தோறும் ரூ.300/- ◆ மாதந்தோறும் ரூ.500/- ◆ மாதந்தோறும் ரூ.1,000/- அனுப்பி இயேசு அழைக்கிறார் குடும்ப ஆசீர்வாத திட்டத்தில் இணைந்து கொள்ளலாம்.

மேலும் விவரங்களுக்கு: இணையதளம்: www.jesuscalls.org/fbp

பங்காளர் சேவை எண்: 044 - 23456677 (காலை 8 முதல் இரவு 8 மணி வரை)

நன்கொடை அனுப்பும் எளிய வழிகளை இந்த இதழின் 16ம் பக்கத்தில் காணலாம்.


Karunya
DEEMED UNIVERSITY
Accreditation
A++ NAAC
NBA
ACCA
CATEGORY 1 Institution UGC GoI.
ADMISSIONS Open 2025
"Great opportunity for working professionals to do
ONLINE
MBA
while working."
GRAB
EARLY
BIRD
OFFER NOW!
1.4 Lakhs for a 2 Year Program
Toll Free: 1800 88 99 888, 1800 42 54 300
UGC entitled Degree deemed equivalent to MBA FT


Karunya
ACADEMY FOR THEOLOGICAL EDUCATION
(Registered Candidate Member ATA)
ADMISSIONS Open 2025
Programmes Offered:
• Bachelor of Theology (B.Th) (3 Yrs)
• Master of Divinity (M.Div) (2 Yrs / 3 Yrs)
• P.G. Diploma in Clinical Biblical Counselling (1 Yr)
• Diploma in Biblical Life & Ministry (1 Yr)
• Diploma in Women Ministry & Leadership (1 Yr)
• Diploma in Prayer & Spiritual Gifts (1 Yr)
MODE OF STUDY
Online : Learning Management System
Distance : Weekly online sessions with study materials
Residential : Well furnished Rooms, Wi-Fi connectivity, Play area for all sports, Homely food
MEDIUM OF INSTRUCTION
English ▸ Tamil ▸ Telugu ▸ Hindi
Karunya Nagar, Coimbatore - 641 114, Tamil Nadu, India.
admissions@kate.education
www.kate.education
FOUNDER'S SCHOLARSHIP IS AVAILABLE
Empowering passionate students to study with purpose and without financial burden.
Motto: Mission with Compassion
Vision: To prepare leaders to serve like Jesus
Enrol
Experience
Execute
KATE: A place for sound doctrine, strong mentorship, and Spirit-filled learning
Scan QR Code to Start the Admission Process
Contact: 94878 46630

கர்த்தருடைய ஊழியத்தில் அருமையான பங்காளரே, உங்களை நினைக்கும்போதெல்லாம் தேவனை ஸ்தோத்திரிக்கிறேன் என்ற பவுலின் வார்த்தைகளையே திரும்ப எழுதுகிறேன் (பிலிப்பியர் 1:6). தேவனுடைய வேலைக்கென்று நீங்கள் செய்துவருகிற எல்லாவற்றுக்காகவும் நன்றி கூறுகிறேன். இயேசு அழைக்கிறார் ஊழியத்தின் மூலம் சுவிசேஷம் அறிவிக்கப்படுவதில் உத்தம பங்காளராக நீங்கள் இருப்பது சிறிய விஷயமல்ல. நீங்கள் செய்யக்கூடிய அதிக பலன் தரக்கூடிய நித்திய முதலீடாக அது இருக்கும். ஒருநாள் நீங்கள் இயேசுவின் முன்பு நிற்கும்போது பரலோகத்தில் பலமடங்கான ஆத்துமாக்களை, உங்கள் காணிக்கையின் மூலம் தொடப்பட்டவர்களை பார்க்கும்போது, இந்த ஊழியத்தில் விதைத்த ஒவ்வொரு விதையின் தெய்வீக தாக்கத்தையும் புரிந்துகொள்வீர்கள்.

உங்கள் உதாரகுணம் நித்தியமான வித்தியாசத்தை உண்டாக்குகிறது. நீங்கள் சுவிசேஷத்தை அறிவிப்பதில் பங்காளராக இருப்பதால் இந்த வாழ்க்கையிலும், வரும் வாழ்க்கையிலும் ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்வீர்கள். செப்டம்பர் மாதத்திற்குள் நீங்கள் பிரவேசிக்கும்வேளையில், “நான் மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன், அப்பொழுது உங்கள் குமாரரும் உங்கள் குமாரத்திகளும் தீர்க்கதரிசனஞ்சொல்லுவார்கள்” (அப்போஸ்தலர் 2:17) என்று தாம் வாக்குப்பண்ணியபடியே தேவன் பரிசுத்த ஆவியானவரை உங்கள்மேலும் உங்கள் குடும்பத்தினர்மேலும் ஊற்றி, உங்கள் உண்மையை கனப்படுத்துவார்.



# உள்ளத்தின் ஆழத்திலிருந்து பேசுகிறேன்...

உங்கள் வாழ்க்கையின் எல்லா பகுதிகளிலும் ஞானம், வெளிப்பாடு, தெய்வீக தயை ஆகியவற்றை அருளும் பரிசுத்த ஆவியானவரின் புதிய பெருமழையை அனுபவியுங்கள்.

கடந்த மாதம் ஊழியத்தின் முக்கிய நடப்புகளை திரும்ப பார்ப்பதோடு, இப்போதைய தேவைகளையும் கவனிப்போம். உங்கள் உண்மையான ஜெபத்திற்கும் உதாரத்துவமான ஆதரவுக்கும் நன்றி. ஊழியத்தின் மேம்பாட்டில் உங்கள் பங்களிப்பு முக்கியமாகும்.

## துதி குறிப்புகள்

ஊழியத்தின் பல்வேறு ஜெபங்கள் மற்றும் வெளியிட கூட்டங்கள் மூலமாக தேவனுடைய பலத்த கரத்தால் தொடப்பட்ட வாழ்க்கைகளுக்காக தேவனுக்கு மகிமை செலுத்துகிறோம். ஜெப கோபுரங்களுக்கு 1,52,869 பேர் நேரில் வருகை தந்தும் 3,77,836 பேர் தொலைபேசி மூலம் தொடர்புகொண்டும், ஜெபத்தின் வல்லமையை அனுபவித்துள்ளனர்; ஆறுதலும் தைரியமும் பெற்றுள்ளனர். சமூக ஊடக தளங்களை புதிதாக 2,24,113 பேர் பார்த்துள்ளனர். பத்திரிகையின் மின்னிதழ் மூலம் 1.5 லட்சம் பேர் ஆசீர்வாதம் பெற்றுள்ளனர். 58,295 பேர் கடிதங்கள் மற்றும் மின்னஞ்சல் மூலமாக ஜெப விண்ணப்பங்களை எழுதியுள்ளனர். அவைகளுக்கு தேவனுடைய அன்பு குறித்த நிச்சயத்தை வாக்குத்தத்தத்துடன் பதில் எழுதியுள்ளோம். ஜெப கோபுரங்கள் மூலமாக நடத்தப்பட்ட 72 வெளியிட கூட்டங்களில் ஆண்டவர் வல்லமையாக செயல்பட்டார். அவற்றின் மூலம் 1,983 மக்கள் ஆசீர் வாதம் பெற்றுள்ளனர். தேவனுடைய வார்த்தையும், ஜெபமும் பல லட்சம்பேர் இதயங்களை தொட்டு, வாழ்க்கை மறுரூபமாக்கி, நம்பிக்கையை அளித்ததற்காக அவரை துதிக்கிறோம். மெய்யாகவே இது கர்த்தருடைய செயலாகும்; அது நம்முடைய கண்களுக்கு ஆச்சரியமா யிருக்கிறது.

முழு இரவு அற்புத ஜெபம், 2025 ஆகஸ்ட் 1ம் தேதி, சென்னையிலுள்ள Dr. டி.ஜி.எஸ். தினகரன் நினைவு ஜெப கோபுரத்தில் நடைபெற்றது. இதில் 1,600 பேர் கூடி

ஒவ்வொருவர் வாழ்விலும் அற்புதங்கள் நடைபெறும்படி ஊக்கமாக ஜெபித்தனர். என் தாயார் சகோதரி ஸ்டெல்லா தினகரன் இடைவிடாமல் ஜெபிக்கும்படி கூட்டத்தினரை ஊக்கப்படுத்தினார்கள். நான் மக்கள் மேல் தீர்க்கதரிசன ஆசீர்வாத மழை பொழியும்படியும், ஆவிக்குரிய வரங்கள் வரும்படியும் ஜெபித்தேன். நான் தீர்க்கதரிசனமாக பெயர்களை அழைத்து சுகத்தையும் விடுதலையையும் அறிவித்தேன். அநேகர் தாங்கள் பெற்ற அற்புத விடுதலையைக் குறித்து சாட்சி கூறினர். என் மகன் சாமுவேல் தினகரன், வாலிபர்களின் பிரச்னைகளை பகிர்ந்துகொண்டு ஜெபத்தில் நடத்தினார். மருமகள் Dr. ஷில்பா தினகரன், இளம் வயதினரின் மறுரூபத்துக் காக ஜெபித்தார். என் மனைவி இவாஞ்சலின் ஆவியில் நிரம்பிய வாழ்க்கைக்காக ஜெபித்து முடித்து வைத்தார். அன்றைய இரவு, தெய்வீக சந்திப்புகளால் விசுவாசம் பலப்படுத்தப்பட்டதாக, தேவனை மகிமைப்படுத்துவதாக அமைந்தது.

சென்னை, வானகரம் இயேசு அழைக்கிறார் ஜெப கோபுரத்தில் புதிதாக கட்டப்பட்ட கில்கால் ஜெப அரங்கு, 2025 ஆகஸ்ட் 5ம் தேதி நடைபெற்ற உபவாச ஜெபத்தின்போது பிரதிஷ்டை செய்யப்பட்டது. 1100 பேர் உபவாச ஜெபத்திற்குக் கூடி வந்தனர். இந்த பரிசுத்த ஸ்தலம், தேவ ராஜ்யம் கட்டப்படும் இட மாக, இருள் அகலும் இடமாக, துக்கம் சந்தோஷமாக மாறும் இடமாக, ஆசீர்வாத மழை பொழியும் இடமாக விளங்க வேண்டும் என்றும், அங்கு ஏறெடுக்கப்படும் எல்லா பிரார்த்தனைகளும் கர்த்தருக்கு முன் சுகந்த வாசனையாக எழும்பவேண்டும் என்றும் ஜெபித்தேன். அந்த அரங்கு இப்போது எல்லோருக்கும் திறந்ததாய் இருக்கிறது.

> “உங்களுடைய ஆதரவு மூலமாக கிறிஸ்துவின் செய்தி தேசங்களை அடையும்”

## வணிக ஆசீர்வாத திட்டம்

**“உன் கைகளின் பிரயாசத்தை நீ சாப்பிடுவாய்; உனக்குப் பாக்கியமும் நன்மையும் உண்டாயிருக்கும்”**
**(சங்கீதம் 128:2)**

வணிகம் செய்யும் மக்களின் முயற்சிகள் வாய்க்கும் படிக்கும், சமுதாயத்திற்கும் தேசத்திற்கும் அவர்களால் பலன் உண்டாகும்படிக்கும் ஊக்கமாக ஜெபிக்கும்படி தேவ வழிகாட்டுதலினால் ஆரம்பிக்கப்பட்ட வணிக ஆசீர்வாத திட்டம் 17வது ஆண்டைக் காண்கிறது. இத்தனை ஆண்டு களில் கணக்கற்ற தொழில்முனைவோர், தொழில் வல்லுநர்கள் இத்திட்டத்தின் மூலம் தாங்கள் கண்ட திருப்புமுனைகளைக் குறித்து சாட்சி கூறியுள்ளனர். நீங்கள் வணிகராயிருப்பீர்களானால், இந்தத் திட்டத்தில் இன்னும் பதிவு செய்யாமல் இருந்தால் இதில் பங்குபெறு மாறு அன்போடு அழைக்கிறோம். இதைக் குறித்த மேலும் விவரங்களை www.jesuscalls.org என்ற இணைய தளத்தில் அல்லது 044-23456677 என்ற பங்காளர் சேவை எண்ணில், காலை 8 முதல் இரவு 8 மணி வரை (இந்திய நேரம்) தொடர்புகொண்டு தெரிந்துகொள்ளலாம். உங்கள் வணிகத்திற்காக ஏறெடுக்கப்படும் ஜெபம், தேவனுடைய நோக்கத்தோடு இசைந்திருக்கவும் நன்மையான தாக்கத்தை ஏற்படுத்தவும் உதவும்.

## இயேசு அழைக்கிறார் வீடியோ ஊழியம்

**“காலத்தைப் பிரயோஜனப்படுத்திக்கொள்ளுங்கள்”**
**(கொலோசெயர் 4:5)**

இயேசு அழைக்கிறார் வீடியோ ஊழியம் தேவனு டைய அன்பையும் வல்லமையையும் அறிவிப்பதில் 44 மகிமையான ஆண்டுகளை கடந்திருக்கிறது. நாற்பது ஆண்டுகளாக ஆண்டவர் இந்த ஊழியத்தின் மூலம் பல லட்சம்பேரை தொட்டிருக்கிறார். அநேகருடைய இருதயங்களும், வாழ்க்கையும், தீர்க்கதரிசன செய்திகள், உற்சாக மூட்டும் பாடல்கள், உள்ளமுரு கும் பிரார்த்தனைகள் மூலம் மறுரூபமடைந்துள்ளன. வாழ்க்கையை மாற்றும் இந்த ஊழியத்தில் நீங்களும் பங்கு பெறலாம். டி.வி. கிளப் திட்டத்தில் சேர்ந்து நிகழ்ச்சிகளை பிறந்த நாள், திருமணநாள் போன்ற விசேஷித்த நாட்களில் தனியாக அல்லது இணைந்து தாங்கி உதவலாம். நிகழ்ச்சியின்போது நன்றி நிறைந்த இருதயத்துடன் நாங்கள் உங்களுக்காக விசே ஷித்த ஜெபத்தை ஏறெடுப்போம். நாம் இணைந்து கணக்கற்ற குடும்பங்களுக்கு சுவிசேஷத்தை அறிவிப்போம்.

## காருண்யா அகாடமி இறையியல் கல்வி

**“வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனுஷன் தேறி னவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதி யுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உப தேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும் சீர்திருத்த லுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜன முள்ளவைகளாயிருக்கிறது” (2 தீமோத்தேயு 3:16,17)**

தேவ ராஜ்யத்திற்கென்று திறம்பட சேவை செய்யும்படி பல்வேறு படிப்புகளை காருண்யா அகாடமி இறையியல் கல்வி வழங்குகிறது. என்னால் நிறுவப்பட்ட இந்த அகாடமி உறைவிட மற்றும் இணையவழி படிப்புகளை தமிழ், தெலுங்கு, ஹிந்தி மற்றும் ஆங்கில மொழிகளில் வழங்குகிறது.

## நடத்தப்படும் படிப்புகள்:

இளங்கலை இறையியல் (B.Th.), Master of Divinity (M.Div.), Diploma in Biblical Life and Ministry, Diploma in Women Ministry and Leadership, P.G. Diploma in Clinical Biblical Counselling, Diploma in Prayer and Spiritual Gifts.

காருண்யா அகாடமி இறையியல் கல்வி பல்வேறு வேதாகம படிப்புகள், Systematic and Contextual இறையியல், வேதாகம ஆலோசனை, தலைமைத்துவம் உள்ளிட்ட பல தலைப்புகள். உங்கள் இறையியல் அறிவை ஆழமாக்க தேடுவீர்களானால் அல்லது ஊழியம் செய்ய ஆயத்தமாவீர்களானால் காருண்யா அகாடமி இறையியல் கல்வி உங்கள் அழைப்புக்கேற்ற படிப்புகளை வழங்குகிறது. www.kate.education என்ற இணைய தளத்தில் தேவ நோக்கத்திற்கேற்ற உங்கள் ஊழியப் பயணத்திற்கான விவரங்களை காணலாம். மேலும், 9487846630 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொண்டும் தெரிந்துகொள்ளலாம்.

## ஜெப தேவைகள்

செப்டம்பர் மாதத்தில் ஜெப கோபுர ஊழியத்தின் மூலமாக 3,00,000 பேரையும், தொலைபேசி ஜெப கோபுரம் மூலமாக 4,00,000 பேரையும், தொலைக்காட்சி மற்றும் சமூக ஊடகங்கள் மூலம் 2 கோடி பேரையும், மின்னஞ்சல் மற்றும் கடிதங்கள் மூலம் 1,00,000 பேரையும், பத்திரிகை மூலம் 2 லட்சம் குடும்பங்களையும் சந்திக்க முயற்சி செய்கிறோம். எங்கள் முயற்சிகள் மிகுந்த பலன் கொடுக்கும்படி, அநேக ஆத்துமாக்களை சந்திக்கும்படி ஜெபித்துக்கொள்ளுங்கள்.

## விசேஷித்த தினங்கள்

**செப்டம்பர் 4** - எனது பிறந்தநாள். தேவனுடைய இரக்கங்களுக்காக அவரை ஸ்தோத்திரிக்கிறேன்.

**செப்டம்பர் 6** - என் அன்பு மருமகள் Dr. ஷில்பா தினகரன் தன் பிறந்தநாளை கொண்டாடுகிறாள்.

**செப்டம்பர் 11** - என் மகள் ஸ்டெல்லா ரமோலாவும், மருமகன் டேனியல் டேவிட்சனும் தங்கள் திருமண நாளை கொண்டாடுகிறார்கள்.

நாங்கள் இன்னும் தேவ மகிமைக்கென்று உழைக்கும்படி, எங்கள் விசேஷித்த நாட்களில் எங்களுக்காக வேண்டிக்கொள்ளுங்கள்.

அன்பானவர்களே, இயேசுவின் வருகை சமீபித்திருக்கிறது. அவருடைய ஊழியத்தை அவசரமாய் நிறைவேற்ற வேண்டியது அவசியமாயிருக்கிறது (யோவான் 9:4). இயேசு அழைக்கிறார் ஊழியத்திற்கு நீங்கள் உத்தமமாய் அளிக்கும் பங்களிப்பு இன்னும் சுவிசேஷத்தை அதிகமாய் அறிவிக்கவும், இழந்துபோனதை இரட்சிக்கவும், ஒடுக்கப்பட்டவர்களுக்கு விடுதலையை அளிக்கவும், நம்பிக்கையற்றோருக்கு நம்பிக்கை அளிக்கவும் அதிகம் உதவும். உங்களுடைய ஆதரவு மூலமாக கிறிஸ்துவின் செய்தி தேசங்களை அடையும்.

தேவ ராஜ்யத்தை கட்டும் பணியில் நாம் தொடர்ந்து ஈடுபடுவோம். இந்த மாதம் அவருடைய வாக்குத்தத்தம் நம் வாழ்க்கையில் நிறைவேறுவதை காண்போம்.

“உங்களை அழைக்கிறவர் உண்மையுள்ளவர், அவர் அப்படியே செய்வார்” (1 தெசலோனிக்கேயர் 5:24)

உங்களுக்காக ஜெபிக்கும் உங்கள் அன்பு சகோதரன்,

Dr. பால் தினகரன்.




கோடிக்கணக்கான ஜனங்களின் கண்ணீர் துடைக்கப்படும்படி
இயேசு அழைக்கிறார் ஊழியத்தைத் தாங்குவதற்கான வழிகள்

ONLINE TRANSFER:

Beneficiary Name: JESUS CALLS
Account No.: 555444333222111
Bank: IndusInd Bank, Rajaji Salai Branch, Chennai - 600001. IFS Code: INDB0000167

Beneficiary Name: JESUS CALLS
Account No.: 000901056144
Bank: ICICI Bank Ltd., Nungambakkam Branch, Chennai 600 034.
IFS Code: ICIC0000009

BANK TRANSFER DETAILS CAN BE INTIMATED: partnercare@jesuscalls.org

QR Code-ஐ ஸ்கேன் செய்து அனைத்து UPI செயலிகள் மூலமும் தாங்கலாம்.

SCAN TO PAY

UPI ID jesuscalls@indus

நீங்கள் வங்கி பரிமாற்றம் மற்றும் வங்கிகளின் செயலிகள் (Apps) மூலமாக நன்கொடை அனுப்பினால், தயவுசெய்து அதைக் குறித்த விவரங்களை உடனே 98409 99923 என்ற எண்ணுக்கு எஸ்எம்எஸ் அல்லது வாட்ஸ்அப் வாயிலாக எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உங்களுக்காக நாங்கள் ஜெபிக்கவும், உங்கள் நன்கொடை வந்து சேர்ந்ததற்கான ஒப்புதலை உங்களுக்கு தெரியப்படுத்தவும் அது உதவும்.

மணியார்டர் (EMO) மற்றும் 'JESUS CALLS' என்ற பெயரில் டிமாண்ட் டிராப்ட் / காசோலை (CTS) எடுத்து, ஜெப கோபுரம், 16, டி.ஜி.எஸ். தினகரன் சாலை, சென்னை - 600 028 என்ற முகவரிக்கு அனுப்பலாம்.

உங்கள் பகுதியிலுள்ள ஜெப கோபுரத்திற்கு நேரில் சென்றும் தாங்கலாம்

# காட்கோபரை ஆசீர்வதிப்பதில் எங்களுக்கு உதவுங்கள்



இயேசு அழைக்கிறார் ஜெப கோபுரங்கள், ஜெபத்தின் மூலமாக ஜனங்களின் வாழ்க்கையை மாற்றும் நம்பிக்கை ஸ்தலமாக விளங்குகின்றன. ஜெப கோபுரங்கள் மூலமாக அனுதினமும் வரும் வல்லமையான சாட்சிகளினிமித்தம் நாங்கள் கர்த்தருக்குள் களிகூருகிறோம்.

## காட்கோபர்

காட்கோபர், இந்தியாவின் வர்த்தக தலைநகரமான மும்பையின் புறநகர்ப்பகுதியாகும். பல்வேறு பின்னணியைக் கொண்ட 6,20,000 பேர் இங்கு வசிக்கின்றனர். ஆம், தினமும் ஜெப கோபுரத்திற்கு வரும் ஜெப விண்ணப்பங்கள் மூலம், பரபரப்பாக இருக்கும் தெருக்களில் உறைந்திருக்கும் ஆழ்ந்த வேதனையை அறிய முடிகிறது.

பண நெருக்கடி, குடும்ப சச்சரவு, ஆரோக்கிய பிரச்னை, இளம் வயது சவால்கள், ஆவிக்குரிய வறட்சி, வேலை இழப்புகள், முறிந்த உறவுகள், நாள்பட்ட வியாதி, அடிமைத்தனங்கள், மனச்சோர்வு, படிப்பினிமித்தமான அழுத்தம் போன்றவை அவற்றுள் சில. காட்கோபர் ஜெப கோபுரம், பட்டணத்திற்கு நம்பிக்கையின், குணமாக்குதலின், மறுரூபமாக்குதலின் மையமாக தொடர்ந்து செயல்படும் என்று நம்புகிறோம். இத்தனை ஆண்டுகளில், கணக்கற்ற மக்கள் தேவனுடைய அற்புத வல்லமையினால் ஆசீர்வதிக்கப்பட்டுள்ளனர்.

### குஷி என்ற பெண்ணின் சாட்சி - இருளிலிருந்து விடுதலை

குஷி என்ற சிறுபெண்ணுக்கு 12 வயது. பள்ளியில் அவளது துடிப்பான புன்னகை பெயர் பெற்றது. பொறாமையின் காரணமாக அவளது தோழியின் குடும்பத்தினர் செய்வினை வைத்தனர். குஷியின் வாழ்க்கை இக்கட்டுக்குள் தள்ளப்பட்டது. இரவில் தூங்காமல் அலறுவாள். அவளது கண்கள் ஒளியிழந்தன. மருத்துவர்களின் சிகிச்சையும், பிற வழிபாடுகளும் பயனளிக்கவில்லை.

விசுவாச பெண்மணியான அவளது பாட்டி, காட்கோபர் ஜெப கோபுரத்திற்கு அவளை அழைத்து வந்தார்கள். ஆரம்பத்தில் குஷி பயந்து ஓடினாள். ஆனால், ஜெப வீரர்கள் அவளுக்காக தொடர்ந்து ஜெபித்தனர். ஆண்டவர் அவளை முழுமையாக விடுவித்து, சந்தோஷம், சமாதானம் ஆகியவற்றை திரும்ப அளித்தார். இன்றைக்கு, சிறைப் பட்டவர்களுக்கு இயேசு விடுதலையளிக்கிறார் என்பதற்கு சாட்சியாக குஷி வாழ்கிறாள்.

**காட்கோபர் ஜெப கோபுரத்திற்கு வருகிறவர்களின் வாழ்க்கை இப்படியாக மறுரூபமாகிறது. அங்கு ஊழியத்தை இன்னும் விரிவாக்குவதற்கு ஜெப கோபுரத்தை தாங்கும்படி வேண்டுகிறோம்.**

### காட்கோபர் ஜெப கோபுர ஊழியத்தில் பங்காளராகுங்கள்

காட்கோபரில் வசிக்கும் 6,20,000 ஆத்துமாக்களையும், ஜெப கோபுர ஊழியத்தின் மூலம் சந்திக்க உங்கள் உதாரத்துவமும் உற்சாகமுமான ஆதரவு தேவை. தேவனுடைய அற்புத வல்லமையை தங்கள் வாழ்வில் கணக்கற்ற மக்கள் அனுபவிக்க உங்கள் நன்கொடைகள் உதவும்.

- 1 ஆத்துமாவை சந்தித்து ஆசீர்வாதத்திற்குள் நடத்துவதற்கு உதவ ரூ.1,000/-
- 100 ஆத்துமாக்களை சந்தித்து ஆசீர்வாதத்திற்குள் நடத்துவதற்கு உதவ ரூ.1,00,000/-
- 1,000 ஆத்துமாக்களை சந்தித்து ஆசீர்வாதத்திற்குள் நடத்துவதற்கு உதவ ரூ.10,00,000/-
- ஆண்டவர் உங்களை வழிநடத்துகிறபடி எண்ணிக்கையிலான ஆத்துமாக்களை ஆசீர்வதிக்க நீங்கள் உதவலாம்.

300 முழு நேர ஜெப வீரர்கள், அவர்கள் பகுதியில் ஊழியத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் 50 ஸ்தானாபதிகள், வாலிபர்களை திரட்ட 5 வாலிப ஊழிய தலைவர்கள், வெளிட நிகழ்ச்சிகளையும் எழுப்புதல் கூட்டங்களையும் நடத்த 5 நற்செய்தியாளர்களை எழுப்பி, ஜெப கோபுர ஊழியத்தை நிறைவேற்ற உங்கள் உதவி எங்களை தாங்கும்.

ஜெபத்தில், சேவையில் எங்களை தாங்கும்படி உங்களை அழைக்கிறோம். volunteer@jesuscalls.org என்ற மின்னஞ்சல் முகவரிக்கு எழுதி அல்லது 6380752239 (காலை 8 முதல் இரவு 8 மணி வரை) என்ற எண்ணில் ஜெப கோபுர மேலாளரை தொடர்புகொண்டு தன்னார்வ ஊழியத்திற்கு பதிவு செய்துகொள்ளலாம்.

www.jesuscalls.org என்ற இணையதளத்தை பார்த்து அல்லது என்ற QR codeஐ ஸ்கேன் செய்து இந்த தேவ பணிக்கு நன்கொடை அளிக்கலாம்.

காட்கோபருக்கு தம் ராஜ்யத்தை கொண்டுவரும் பணியில் பங்காளராகும் உங்களுக்கு ஆண்டவர் தாமே பரிபூரண ஆசீர்வாதங்களை அருளுவாராக.

கேள்வி பதில்

திரு. மாத்யூ பாஸ்



# ஏழைக்கு பெரிய கனவுகள் இருக்கக்கூடாதா?

## சகோ. சாமுவேல் தினகரன் பதிலளிக்கிறார்

அன்பு நண்பருக்கு,

உள்ளத்தைத் தொடும் இந்தக் கேள்விக்காக உங்களுக்கு நன்றி. தங்கள் பின்னணியே தங்களது எதிர்காலத்தை தீர்மானிக்கிறதோ என்ற அநேகரின் உள்ளக் குமுறலை இது காட்டுகிறது. உங்கள் குடும்பத்தில் யாரும் செய்திராத ஒன்றை செய்வதற்கு முயற்சிப்பதில் இருக்கும் வேதனையை நான் புரிந்துகொள்கிறேன். நீங்கள் தொடர்ந்து முயன்றும், ஜெபித்தும், திருப்புமுனை ஒன்று ஏற்படும் என்று நம்பியும் இன்னும் வாசல்கள் திறக்கவில்லை. ''இந்தக் கனவு என்னுடைய தகுதிக்கு மிகப் பெரியதா?'' என்ற கேள்வி எழுவது இயற்கையானது. தேவன் நம் நடுவில் இருக்கின்றபோது, எந்தக் கனவும் அடையக்கூடாத அளவு பெரியதல்ல என்று நான் மறுபடியும் நிச்சயமாகக் கூறுகிறேன்.

ஆம், மனுஷீகமாக இது சவாலானது. ஏழை பின்னணியிலிருந்து வரும்போது இந்தப் பயணம் சிரமமானதாக தோன்றும். பணம் இல்லாமல் உயர்ந்த பள்ளிகளில் படிக்க முடியாது. தொடர்புகள் இல்லாமல் பெரிய வேலையில் அமர்வதும் கடினமானது. பெற்றோரின் வழிகாட்டுதல், மாதிரி இல்லையென்றால் இருளுக்குள் பயணிப்பதாக உணருவீர்கள்.

செல்வமிக்க, நிலைத்த வியாபாரங்களை நடத்தும் குடும்பங்களிலுள்ளவர்கள் வேகமாக தொழிலைக் கற்றுக்கொள்வதாக, உயருவதாக, எளிதில் முன்னேறுவதாக தோன்றும். மாறாக, உங்கள் முன்னேற்றம் மிக மெதுவானதாக, குறிப்பிடத்தக்க அளவு இல்லாததாக தோன்றலாம். மனுஷருக்கு இது சவாலானது; ஆனால், தேவனுக்கு சவால் அல்ல என்பதே சத்தியம்.

மதுரையில், சோனியா என்று ஒரு பெண் இருந்தார்கள். அவர்கள் பள்ளியில் படிக்கும்போதே பெற்றோரை இழந்துவிட்டார்கள். அவர்களும், அவர்கள் சகோதரனும் தனித்துவிடப்பட்டனர். தங்கள் பெற்றோரின் பணத்தை அனுபவிக்க முடியாமல் இருந்தனர். சகோதரனுக்கு கல்வி கட்டணம் செலுத்த ஒரு வேலை தேடிக்கொள்வதும் அவர்களுக்கு போராட்டமாக இருந்தது. வாழ்க்கை நம்பிக்கையற்று காணப்பட்டது. ஒருநாள் வீட்டுக்கு நடந்து சென்றுகொண்டிருந்தபோது, இயேசு அழைக்கிறார் ஜெப கோபுரத்தை பார்த்தார்கள். உள்ளே சென்று தனக்காக ஜெபிக்கும்படி கேட்டுக்கொண்டார்கள். ஜெப வீரர்கள், அவர்களது தேவைகள் அருளப்படவும், பெற்றோரின் பணம் விடுவிக்கப்படவும், நல்ல வேலை கிடைக்கவும் ஜெபித்தனர். அந்த ஜெபம் அவர்களுக்குள் விசுவாசத்தை தூண்டியது. தேவன் அவர்களுக்கு வாசலை திறந்தார். பணம் விடுவிக்கப்பட்டது. அவர்களுடைய சகோதரனின் கல்விக்கான கட்டணம் செலுத்தப்பட்டது. நல்ல வேலையும் கிடைத்தது. தேவன் அவர்கள் துக்கத்தை சந்தோஷமாக மாற்றினார். இப்போது சோனியாவுக்கு திருமணமாகி, நல்ல குடும்பம் இருக்கிறது. வேலையும் ஆசீர்வாதமாக இருக்கிறது. ஒன்றுமில்லாத நிலையிலிருந்து தேவன் அவர்கள் வாழ்வை கட்டியெழுப்பினார். வேதம் என்ன கூறுகிறது?

**''பலத்தினாலும் அல்ல, பராக்கிரமத்தினாலும் அல்ல, என்னுடைய ஆவியினாலேயே ஆகும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்'' (சகரியா 4:6)**

தேவன், பின்னணியின் அடிப்படையில் தெரிந்துகொள்பவரில்லை. உங்கள் குடும்ப வரலாறு, பொருளா

தார நிலை அல்லது மனுஷரின் திறன் அவரை மட்டுப் படுத்தாது. தம்மை பின்பற்றுகிற ஓர் இருதயத்தையே அவர் பார்க்கிறார்.

எளிமையான மீனவனான பேதுருவை அற்புதங் களைச் செய்யும் அப்போஸ்தலனாக அழைத்தார். மேய்ப்பனான தாவீதை ராஜாவாகும்படி அழைத்தார். சேனையை நடத்தும்படி விவசாயியான கிதியோனை அழைத்தார். அவர்களுக்கெல்லாம் அப்படி அவரால் செய்யக்கூடுமானால், உங்களுக்குச் செய்ய முடியாதா?

குக்கிராமம் ஒன்றிலிருந்து ஒரு வாலிபன் காருண்யா பல்கலைக்கழகத்தில் படிப்பதற்காக வந்தான். தமிழ் மட்டுமே பேசக்கூடிய அவன், Dr. டி.ஜி.எஸ். தினகரனும், Dr. பால் தினகரனும் ஆங்கிலத்தில் பிரசங்கிப்பதைக் கண்டு வியந்தான். அவன், "ஆண்டவரே, நான் ஆங்கிலத்தில் பிரசங்கிப்பதற்கும், பெரிய மேடைகளில் பேசுவதற்கும் எனக்கு உதவி செய்யும்" என்று ஜெபிக்க தொடங்கினான். முதலில் சிறிய கூட்டங்களில் தன்னார்வ மாக ஊழியம் செய்தான். பேராசிரியர்கள் அவனை உற்சாகப்படுத்தினர். மெதுவாக, அவனது ஆங்கிலம் மேம்பட்டது. தேவன் அவனை பயன்படுத்த தொடங்கி னார். இன்றைக்கு அவன் சர்வதேச அளவில் சிங்கப்பூரி லும், மலேசியாவிலும் ஆங்கிலத்தில் பிரசங்கிக்கிறான். தேவன் செய்ததைக் குறித்து இன்னும் ஆச்சரியப்படுவதாக கூறுகிறான்.

**தேவன் நம் நடுவில் இருக்கின்றபோது, எந்தக் கனவும் அடையக்கூடாத அளவு பெரியதல்ல**


## நீங்கள் என்ன செய்யவேண்டும்?

விட்டுவிடாதிருங்கள். ஆம், மக்கள் சிரிக்கக் கூடும். அவர்கள், "பெரிதாக கனவு காணாதே" என்று கூறலாம். ஆனால், உங்கள் தேவன் அவர்கள் வார்த்தைகளைக் காட்டிலும் பெரியவர். கண்களை ஏறெடுத்து ஆண்டவரை பாருங்கள். உங்கள் கனவுகளை அவரிடம் ஒப்படையுங்கள். "நீர் என் வாழ்க்கையை வழிநடத்தும்" என்று அவரிடம் சொல்லுங்கள். அவர் அதை செய்துமுடிப்பார். வாசல்களைத் திறப்பார். அற்புதங்களைச் செய்வார்.

அன்பு நண்பரே, தேவன் உங்களை ஆசீர்வதிப்பார். உங்கள் பின்னணியையும், மக்கள் சொல்வதையும் நினைத்து பயப்படாதிருங்கள். ஆண்டவரின் ஆசீர்வாதம் உங்களை உயர்த்துவதற்கான காலம் வந்திருக்கிறது. உங்கள் வாழ்க்கை மாறுவது முடியாதது அல்ல; அது சமீபித்திருக்கிறது.

**2025 செப்டம்பர் 5 - இயேசு அழைக்கிறார் ஊழியம் அனைத்து ஆசிரிய ஆசிரியைகளுக்கும் மகிழ்ச்சியான ஆசிரியர் தின வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறது**

### ஆசிரியர்களுக்கான சிறப்பு பிரார்த்தனை




பரம தகப்பனே, நான் ஓர் ஆசிரியராக பணிபுரியவேண்டும் என்று அழைத்ததற்காக உம்மை ஸ்தோத்திரிக்கிறேன். இது புனிதமான ஒரு பொறுப்பு. தினமும் வகுப்பறைக்குள் செல்லும்முன்பு உமது பெலனை, ஞானத்தை, கிருபையை எனக்குத் தாரும். என்னுடைய சுயபெலனால் இதைச் செய்ய முடியாது. ஆனால், உம்மால் சகல காரியங்களையும் செய்ய முடியும் என்று அறிந்திருக்கிறேன்.

ஆண்டவரே, ஒவ்வொரு மாணவனிடமும், குறிப்பாக என் பொறுமையை சோதிக்கிறவர்களிடமும் பொறுப்புடன் நடந்துகொள்ள உதவி செய்யும். அவர்களின் தேவையை புரிந்துகொள்ளும் திறனையும், தெளிவாக கற்பிக்கவேண்டிய ஞானத்தையும், உம்முடைய இருதயத்தை பிரதிபலிக்கும் அன்பையும் எனக்கு தாரும். அவர்களை நன்மையான விதத்தில் வழிநடத்தவும், அவர்கள் மனங்களை அறிவினால் மட்டுமல்ல; ஞானத்தினாலும் சத்தியத்தினாலும் வடிவமைக்கவும் உதவி செய்யும்.

நான் களைத்துப்போகும்போது என்னை புதுப்பியும். நான் மனச்சோர்வுறும்போது என் வேலைக்கு நித்திய மதிப்புண்டு என்று எனக்கு நினைவுபடுத்தும். எல்லோருடைய வாழ்க்கையையும் தொடும் நம்பிக்கை, நோக்கம் இவற்றுக்கான விதைகளை விதைக்க எனக்கு உதவி செய்யும். என்னுடைய வகுப்பறை, உமது சமாதானம் தங்கியிருக்கும் இடமாகவும், எல்லா மாணவர்களும் தாங்கள் கவனிக்கப்படுகிறோம்; மதிக்கப்படுகிறோம்; நேசிக்கப்படுகிறோம் என்று உணரக்கூடிய இடமாகவும் அமையட்டும்.

உண்மைக்கும் தாழ்மைக்கும் நீடியபொறுமைக்கும் மாதிரியாய் விளங்க எனக்குக் கற்பியும். என்னுடைய வார்த்தைகள் ஊக்குவிக்கிறவையாக, செயல்கள் கற்பிக்கிறவையாக இருக்கட்டும். நான் இருக்குமிடத்திலே உம்முடைய வெளிச்சத்தை பிரகாசிக்க உதவி செய்யும். எல்லா பாடங்களிலும், திருத்தங்களிலும், உரையாடல்களிலும் உம்முடைய ஞானமும் கிருபையும் விளங்கும்படி உம்முடைய ஆவியினால் என்னை நடத்தும்.



எல்லா பாடங்களுக்கான ஆயத்தக் குறிப்புகளையும், சவால்களையும், மாணவ மாணவியரையும் உம்முடைய கரங்களில் ஒப்படைக்கிறேன். அனுதினமும் என்னோடு வாரும். எல்லா மாணவரும் உயர்ந்த மதிப்பெண்களோடு தேர்ச்சி பெறுவதை நான் காணும்படி கிருபை செய்யும். வாழ்க்கைகளை வடிவமைப்பதற்குக் கொடுத்திருக்கும் இந்த வாய்ப்புக்காக உமக்கு ஸ்தோத்திரம். நான் செய்கிறவை எல்லாவற்றிலும் உம்முடைய மகிமை வெளிப்படவேண்டுமென்று இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன், ஆமென்.

பிரார்த்தனைக்கு ஆதாரமாக அமைந்த வேத வசனங்கள்: கொலோசெயர் 3:23, யாக்கோபு 1:5, ஏசாயா 40:29-31, பிலிப்பியர் 4:13, கலாத்தியர் 6:9

(சகோ. சாமுவேல் தினகரன் ஜெபத்துடன் எழுதிய பிரார்த்தனை)

வாலிபர் பகுதி

# ஆவிக்குரிய வாழ்வில் அடுத்த நிலையை அடைவது எப்படி?

அன்பானவர்களே, “எனது ஆவிக்குரிய வாழ்வில் ஆழமாக செல்வது எப்படி?” என்று எப்போதாவது சிந்தித்திருக்கிறீர்களா? கிறிஸ்துவை பின்பற்றும் இளைஞராகிய, இளம் பெண்ணான நீங்கள் ஏற்கனவே ஆலயத்திற்கு சென்று வருவீர்கள்; வேதாகமத்தை வாசிப்பீர்கள்; மற்றவர்களுக்கு உதவி செய்வீர்கள். அது நல்ல தொடக்கம். ஆனால், தேவன் நம்மை இன்னும் வளர்ந்து அடுத்த நிலைக்குச் செல்லவேண்டும் என்று அழைக்கிறார்.

சிறுபிள்ளை, இளம்பருவம், பெரியவர் என்று நாம் வளருவதுபோல, ஆவிக்குரிய பயணத்திலும் முன்னேற்றம் காணப்படவேண்டும். இயேசுவை முதலில் ஏற்றுக்கொள்ளும்போது நாம் ஆவிக்குரிய குழந்தைகளாக இருக்கிறோம். பின்பு ஜெபிக்கக் கற்றுக்கொண்டு, வேதம் வாசித்து, அடிப்படை விசுவாசத்தை புரிந்துகொண்டு சிறுபிள்ளைகளாக வளருகிறோம். நாம் முதிர்ச்சியடையும்போது உபவாசிக்கிறோம்; ஊழியம் செய்கிறோம்; மற்றவர்களுக்கு ஆதரவு அளிக்கிறோம்; கிறிஸ்துவுக்கு சாட்சிகளாக மாறுகிறோம். ஆனால், அத்துடன் நின்றுவிடுவதில்லை. இயேசு, “பரிசுத்தஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து, ...எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்” (அப்போஸ்தலர் 1:8) என்று கூறுகிறார். பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்வது, அவருடைய வரங்களைப் பெற்றுக்கொள்வது அவசியம். இந்த வரங்கள் நமக்கு தனிப்பட்ட விதத்தில் ஆசீர்வாதங்களை தருவதோடு, மற்றவர்களுக்கு ஊழியம் செய்யவும், உலகில் நன்மையான தாக்கத்தை ஏற்படுத்தவும் பெலப்படுத்துகிறது.

ஆவிக்குரிய பயணத்தின் அடுத்த நிலை, திருச்சபைக்கு வெளியே சீஷர்களை உருவாக்குவதாகும். உங்கள் வரங்களை பயன்படுத்தி தேவனுக்காக வாழும்போது, அவர் உங்கள் வாழ்க்கைக்குள் மேலும் வரங்களை ஊற்றுவார்; ஆவிக்குரியவிதத்தில், தனிப்பட்டவிதத்தில், ஊழிய முறையில் உங்களை மறுரூபமாக்குவார்.

## தேவனுடைய வார்த்தையில் ஆழமாக வேரூன்றுங்கள்

தேவனுடைய வார்த்தையில் ஸ்திரமான அஸ்திபாரம் இருப்பதே முக்கியம். ஆலயத்திற்கு செல்வது அவசியம்; ஆனால், தனிமையாக வேதத்தை வாசிப்பது உங்களை தேவனுடன் இணைக்கும். “உம்முடைய வசனம் என் கால்களுக்குத் தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது” (சங்கீதம் 119:105). வசனம், வழிகாட்டி தகவலை மட்டும் தருவதில்லை; மறுரூபமுமாக்குகிறது. நாம் திருவசனத்தைக் கேட்கிறவர்களாக மாத்திரமல்ல; அதன்படி நடக்கிறவர்களாகவும் இருக்கவேண்டும் (யாக்கோபு 1:22). தினசரி வாழ்வில் தேவனுடைய வார்த்தையை நடைமுறைப்படுத்தும்போது அது உங்களை மாற்றுகிறது.

போனுக்கு தினமும் சார்ஜ்போடுவது அவசியம் என்பது போல் உங்கள் ஆவியை தினமும் வேதவசனத்தின் மூலம் புதுப்பிக்கவேண்டும். பிசாசை எதிர்க்க இயேசுவே, “மனுஷன் அப்பத்தினாலேமாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான்” என்ற வேத வசனத்தை பயன்படுத்தினார் (மத்தேயு 4:4). இயேசுவுக்கே தேவனுடைய வார்த்தை அவசியமானால் நமக்கு எவ்வளவு அதிகமாய் தேவைப்படும்? வேதவசனங்கள் எல்லாம் நற்கிரியை செய்ய



ஸ்டெல்லா ரமோலா
stellaramola@jesuscalls.org stellazlife

நம்மை பயிற்றுவிப்பவையாக, படிப்பிக்குதலுக்கு பயனுள்ளதாக இருக்கின்றன (2 தீமோத்தேயு 3:16,17). தேவன் கொடுக்கும் எந்த வேலையையும் செய்ய ஆயத்தமாகும்படி வேதம் நம்மை வனைகிறது.

### ஸ்திரமான ஜெப வாழ்க்கை

ஜெபம், தேவனுடனான நேரடி இணைப்பாகும். ''என்னை நோக்கிக் கூப்பிடு, அப்பொழுது நான் உனக்கு உத்தரவு கொடுத்து, நீ அறியாததும் உனக்கு எட்டாதது மான பெரிய காரியங்களை உனக்கு அறிவிப்பேன்'' (எரேமியா 33:3). ஜெபம், எளிமையாக தேவனோடு பேசி, உறவை உருவாக்குவதாகும். ஜெபிக்காத நிலையில் நம் ஆவிக்குரிய வாழ்க்கை, இணைப்பு விட்டுப்போன Wi-Fi போன்று இருக்கும். ஆனால் இடைவிடாது ஜெபிப்பது, ஞானம், சமாதானம், சுகம், வழிகாட்டுதல் ஆகிய பரலோக விஷயங்களை தரும். மரணம் நேரிடும் என்ற அச்சுறுத்தலின் மத்தியிலும் தானியேல் தினமும் மூன்று முறை தொடர்ந்து ஜெபித்தான். உண்மையான ஜெபம் அவனுக்கு தைரியத்தை கொடுத்தது; சிங்கங்களிட மிருந்து அதிசயவிதமாக அவனை பாதுகாத்தது.

''சோர்ந்துபோகாமல் எப்பொழுதும் ஜெபம்பண்ண வேண்டும்'' (லூக்கா 18:1). ஜெபம், நமது கடைசி ஆயுத மல்ல; முதலாவதாக செய்யவேண்டியதாகும். ஜெபத்தின் வழியாக தேவன் நம்மை பெலப்படுத்துகிறார்; மனதுருக் கத்தால் நிறைக்கிறார்; நமக்குப் பதில் கொடுக்கிறார்.

### பரிசுத்த ஆவியின் வரங்களைப் பெற்றுக்கொள்ளுங்கள்

ஆவிக்குரியவிதத்தில் வளருவதற்கு பரிசுத்த ஆவி யின் வரங்களை தேடவேண்டும். இது சிலருக்கு மட்டும் ஒதுக்கி வைக்கப்பட்டிருப்பதல்ல. தேவனுக்கு ஊழியம் செய்ய விரும்பும் ஒவ்வொருக்கும் கிடைக்கும். பரிசுத்த ஆவியை பெறுவதற்கு ஆரம்ப அடையாளம் வெவ்வேறு பாஷைகளை பேசுவதாகும். ஆவியானவரால் நிரப்பப் பட்டு அவர் உதவியுடன் வேறு பாஷைகளை பேசிய சீஷர்கள் குறித்து வேதம் குறிப்பிடுகிறது (அப். 2:1-4).

இந்த அனுபவம் எல்லா தலைமுறையினருக்கும் உரியது. ''நான் மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன்; அப்பொழுது உங்கள் குமாரரும் உங்கள் குமாரத்திகளும் தீர்க்கதரிசனஞ் சொல்லுவார் கள்'' (யோவேல் 2:28). தேவன், வாலிபர்களையும் முதியோரையும், செல்வந்தரையும் ஏழையையும் பெலப் படுத்த விரும்புகிறார்.

### வாலிபத்தில் தைரியமாயிருங்கள்

தேவன், வாலிபர்களை, வாலிபப் பெண்களை தைரிய மாக எழும்பும்படி அழைக்கிறார். ''உன் இளமையைக் குறித்து ஒருவனும் உன்னை அசட்டைபண்ணாதபடிக்கு, நீ... மாதிரியாயிரு'' (1 தீமோத்தேயு 4:12) என்று பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதுகிறார். பரிசுத்த ஆவி உங்களை நிரப்பும்போது, நீங்கள் தைரியமாக பேசுவதற்கும், நீதியாக வாழ்வதற்கும், தனிப்பட்டவிதத்தில் அல்ல; வெளியரங்க மாக மற்றவர்களை மாற்றவும் பெலப்படுவீர்கள்.

உங்களை ஊக்கப்படுத்துவதற்காக உண்மை சம்பவம் ஒன்றை பகிர்ந்துகொள்கிறேன்.

1962ம் ஆண்டு, இந்தியாவில் ஒரு மனிதர் ஒரு கைப்பிரதியைப் பார்த்தார். ''உயிர்த்தெழுந்த இயேசுவின் வல்லமையை வந்து பாருங்கள்'' என்று அதில் எழுதப் பட்டிருந்தது. சுவிசேஷகர் டி.எல். ஆஸ்பார்ன் அதில் பிரசங்கித்தார். கூட்டத்தின் கடைசி நாளில், ''நீங்கள் வியாதிப்பட்டிருந்தால் பாதிக்கப்பட்ட பகுதியில் கை வைத்து, இயேசுவை விசுவாசியுங்கள்'' என்று கூட்டத்தி னரைப் பார்த்துக் கூறினார். அன்றைய தினம் ஆயிரணக் கானோர் சுகம் பெற்றனர். 80,000த்துக்கும் மேலானோர் தங்கள் கைகளை உயர்த்தி இயேசுவை ஆண்டவராக ஏற்றுக்கொண்டனர். ஆஸ்பார்ன், ''இந்தியா, இயேசுவை ஏற்றுக்கொள்ள ஆயத்தமாக இருக்கிறது. இவர்களை வழிநடத்த நான் அமெரிக்காவிலிருந்து வந்திருக்கிறேன். இங்கே நீங்கள் என்ன செய்துகொண்டிருக்கிறீர்கள்?'' என்று கேட்டார். அன்று என் தாத்தா, தேவனுக்கு ஊழியம் செய்யும்படி தன்னை அர்ப்பணித்தார். பின்பு நடந்தவை மகிமையானவை.




இந்த அழைப்பு இன்றும் கேட்கிறது. நீங்கள் எழும்பு வீர்களா? இப்போதே அர்ப்பணியுங்கள். ''ஆண்டவரே, என்னை பயன்படுத்தும்; என் பகுதியில் என்னை உம்முடைய நாமத்திற்கு சாட்சியாக வைத்திடும். பரிசுத்த ஆவியின் வரங்களினால் நான் நிரப்பப்பட வாஞ்சிக் கிறேன். நான் ஊழியம் செய்வதற்கு, அன்புகூருவதற்கு, சுகப்படுத்துவதற்கு, தீர்க்கதரிசனம் உரைப்பதற்கு விரும்புகிறேன். புண்பட்டவர்களுக்கு நம்பிக்கையையும், இயேசுவிடம் மக்களை வழிநடத்த விரும்புகிறேன்'' என்று அவரிடம் கூறுங்கள்.

பரிசுத்த ஆவியானவர் உங்களை நிரப்ப ஆயத்தமாக இருக்கிறார். நீங்கள் அதற்காக ஜெபித்துக்கொண்டிருந் தால், விட்டுவிடாதிருங்கள். தொடர்ந்து கேளுங்கள்; தொடர்ந்து தேடுங்கள்; பெற்றுக்கொள்வீர்கள். அவர் உங்களை நிரப்பும்போது, சந்தோஷத்தை, தைரியத்தை, குறிக்கோளை அடைவீர்கள். பள்ளி, கல்லூரி, வேலை செய்யுமிடம் எங்கும் கிறிஸ்துவுக்காக நில்லுங்கள். அவரது அன்புக்கும், சமாதானத்துக்கும், வல்லமைக்கும் சாட்சியாக இருங்கள். உங்கள் வாழ்வின் மூலம் மற்றவர்கள் இயேசுவை காணட்டும்.



# கர்த்தரைத் தேடும்பொழுது பெறும் தெய்வீக ஆசீர்வாதம்!

- சகோதரி ஸ்டெல்லா தினகரன்

"கர்த்தரை கண்டடையத்தக்க சமயத்தில் அவரைத் தேடுங்கள்; அவர் சமீபமாயிருக்கையில் அவரை நோக்கிக் கூப்பிடுங்கள்"
ஏசாயா 55:6

அருமையானவர்களே, "கர்த்தரைக் கண்டடையத்தக்க சமயத்தில் அவரைத் தேடுங்கள்" என்று மேற்கண்ட வேத வசனம் சொல்லுகிறது. என்னுடைய வாழ்க்கையிலே, நான் கிறிஸ்தவக் குடும்பத்தில் பிறந்து வளர்ந்தபோதிலும், எனது 16-ஆவது வயது வரையிலும் தேவனைத் தேடுகிறதற்கு சற்றும் விருப்பம் இல்லாமலிருந்தேன். ஆனால், ஒருநாள் என் பெற்றோரின் அன்பிற்காக நான் ஏங்கிக்கொண்டிருந்தபொழுது, ஆண்டவர் என்னைத் தேடி வந்து, என்னோடு பேசினார். "உன் பெற்றோரைத்தான் நீ தேடிக்கொண்டிருக்கிறாய்; உன் ஆண்டவராகிய என்னை நீ இன்னும் அறியாமல் இருக்கிறாயே! மகளே! நீ என்னை பயபக்தியோடு தேடுவாயாகில், நான் உன்னோடுகூடவே இருந்து, எப்பொழுதும் உன் வாழ்க்கையை நிறைவாய் ஆசீர்வதிப்பேன்" என்று கூறினார். அன்றிலிருந்து என்னையுமறியாமல் நான் ஆண்டவரை பயபக்தியோடு தேட ஆரம்பித்தேன். எனது 21-வது வயதிலே ஆண்டவர் எனக்கு அருமையான, அன்பினால் நிறைந்த ஆவிக்குரிய கணவரைக் கொடுத்து, என் வாழ்க்கையை மிகவும் ஆசீர்வதித்தார். அதினிமித்தம் என்னுடைய வாழ்க்கை ஆவிக்குரியவிதமாகவும் சிறந்து விளங்கியது. அன்று ஆண்டவரை நான் முழு மனதோடு தேடினதினாலே, இன்றுவரை அவரது தெய்வீக ஆசீர்வாதங்களை நான் சம்பூரணமாக அனுபவித்து வருகிறேன். அருமையான தேவனுடைய பிள்ளைகளே, ஒரு வேளை நீங்களும் அவ்வாறே அவரைத் தேட வேண்டிய பிரகாரம் தேடாமலிருப்பீர்களேயானால், இன்றைக்கு ஒரு தீர்மானம் செய்யுங்கள். ஆம்! பயபக்தியோடு அவரைத் தேட ஆரம்பியுங்கள். விசேஷமாக வாலிப வயதினரே, உங்கள் சிருஷ்டிகரை பயபக்தியோடு தேடுங்கள் (பிரசங்கி 12:1).

ஆண்டவரை தேடுவது எப்படி? ஏன் அவரை தேட வேண்டும்? இவைகளைப் பற்றி நாம் ஆழமாகத் தியானிப்போமா?

## கேளுங்கள்! தேடுங்கள்! தட்டுங்கள்! நிறைவான ஆசீர்வாதம் பெறுங்கள்!

**"கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்; தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; தட்டுங்கள், அப்பொழுது உங்களுக்கு திறக்கப்படும்"** (மத்தேயு 7:7)

முதலாவதாக நாம் பார்க்கும்பொழுது,

**"நான் கர்த்தரை நோக்கி சத்தமிட்டுக் கூப்பிட்டேன், அவர் தமது பரிசுத்த பர்வதத்திலிருந்து எனக்கு செவிகொடுத்தார்."** (சங்கீதம் 3:4)

என்று வாசிக்கிறோம். நான் ஆண்டவரிடம் முதன் முதலாக இவ்வாறே பேசக் கற்றுக்கொண்டேன். சாதாரண மனுஷர்களிடம் பேசுவதால் எந்தவிதமான பிரயோஜனமுமில்லை. ஆகவே, நீங்களும் ஆண்டவரிடத்தில் முகமுகமாகப் பேச வாஞ்சை கொள்ளுங்கள். விசேஷமாக, வாலிபப் பிள்ளைகளும், சிறு பிள்ளைகளும் இளம் வயதிலேயே கர்த்தரோடு பேச கற்றுக்கொள்ளுங்கள். அதற்கு நீங்கள் செய்ய வேண்டிய முக்கியமான காரியம், ஒவ்வொருநாளும்

வேத வசனத்தை கருத்தாய் வாசித்து தியானித்து, ஜெபத்தில் தரித்திருங்கள். அப்பொழுது மட்டுமே அவர் உங்களோடு பேசுவார். ஆம், ஆண்டவர் நம்முடைய சத்தத்தை வாஞ்சையுடன் கேட்கிறவர். நாம் அவ்வாறு கூப்பிடும்பொழுது அவர் நமக்கு நிச்சயம் செவிகொடுப்பார். நீங்கள் யாராக இருந்தாலும், எந்த சமயத்தில் அவரை நோக்கிக் கூப்பிட்டாலும், அவர் உங்களோடு வாஞ்சையோடு பேசுவார், உங்களுக்கு நிச்சயம் பதில் கொடுப்பார்.

**“கர்த்தர் என் விண்ணப்பத்தைக் கேட்டார்; கர்த்தர் என் ஜெபத்தை ஏற்றுக் கொள்ளுவார்.”** (சங்கீதம் 6:9)

என்று தாவீது தன்னுடைய வாழ்க்கையில் இதை அனுபவித்து எழுதியிருக்கிறான். ஆம், எந்த இடத்திலும் சரி, எந்த சூழ்நிலையிலும் சரி, எந்த நேரத்திலும் சரி, நீங்கள் பயபக்தியுடனும், பணிவுடனும் கர்த்தரை நோக்கிக் கூப்பிடும்பொழுது, அவர் உங்கள் ஜெபத்தை நிச்சயம் கேட்பார் (ஏசாயா 55:6).

## கர்த்தரைத் தேடுவது எப்படி?

வேத புத்தகத்திலே, அநேக பக்தர்கள் கர்த்தரை எப்படியெல்லாம் தேடினார்கள்? என்பதைக் குறித்து தெளிவாக வாசிக்கிறோம். ஆபிரகாம் தேவனை எப்படி தேடினான்? ஆபிரகாமுக்கு 99 வயது. அந்த வயதிலும்கூட அவனுக்கு குழந்தையே இல்லை! அதோடுகூட, அவனுடைய மனைவி சாராளுக்கு ஸ்திரீகளுக்குள்ள வழிபாடும்கூட நின்று போயிற்று! எனவே, குழந்தையைப் பெற்றெடுக்கும் பாக்கியம் அவளுக்கு இல்லை. ஆனால், அப்படிப்பட்ட சூழ்நிலையிலும், ஆபிரகாம் ஆண்டவர் மீது விசுவாசம் வைத்து அவரை பயபக்தியோடு தேடினான். அவ்வாறு அவன் தேடினபொழுது, கர்த்தர் எவ்வாறு அவனுக்கு பிரசன்னமாகி, தமது தெய்வீக ஆசீர்வாதத்தை நிறைவாய் பொழிந்தருளினார்?

**“அநேக ஜாதிகளுக்கு உன்னை தகப்பனாக ஏற்படுத்தினேன் என்று வேதத்தில் எழுதியிருக்கிறபடி, அவன் தான் விசுவாசித்தவருமாய், மரித்தோரை உயிர்ப்பித்து, இல்லாதவைகளை இருக்கிறவைகளைப்போல் அழைக்கிறவருமாயிருக்கிற தேவனுக்கு முன்பாக தமது வயதுசென்ற காலத்திலும் தகப்பனானான்.”** (ரோமர் 4:17)

ஆபிரகாம், ஆண்டவருக்கு ஒரு பெயர் கொடுத்தான். அதென்னவெனில், “இல்லாதவைகளை இருக்கிறவைகளைப்போல் அழைக்கிற தேவன்” என்பதாகும் (ரோமர் 417). இன்றைக்கு ஒருவேளை நீங்களும்கூட குழந்தையில்லாமை போன்ற பற்பல இல்லாமைகளினிமித்தம் மனவேதனையோடு இருக்கலாம்.

> நீங்கள் சிறுமையிலிருந்து மீட்கப்பட்டு ஆசீர்வாதம் பெற ஒரே வழி, கர்த்தரைத் தேடுவது மட்டுமே

ஆனாலும் திடன் கொள்ளுங்கள். கர்த்தருடைய வார்த்தை வல்லமையுள்ளது! அந்த வார்த்தை உங்களுக்குள் இறங்கும்பொழுது, உங்கள் வாழ்க்கையில் என்னென்ன குறைவுகள் காணப்படுகிறதோ, என்னென்ன இல்லாமைகள் இருக்கிறதோ, அவைகளையெல்லாம் நீங்கள் நிச்சயமாகப் பெற்றுக்கொள்வீர்கள். ஆகவே, விசுவாசத்தோடு, நம்பிக்கையோடு கர்த்தரை நோக்கிக் கூப்பிடுவீர்களானால், அவர் உங்களுடைய எல்லா இல்லாமைகளையும்கூட இருக்கிறவைகளாகவே மாற்றுவார்! அதற்காக ஆபிரகாம் என்ன செய்தான்? ரோமர் 4-ஆம் அதிகாரத்திலே, அவன் எப்படி ஆண்டவரைத் தேடி ஆசீர்வாதத்தை பெற்றுக்கொண்டான்?

முதலாவது, அவன் தேவனை “விசுவாசித்தான்”. விசுவாசத்தில் அவன் பலவீனமாக இருக்கவில்லை. இரண்டாவதாக, ரோமர் 4:20-ல், தேவனுடைய வாக்குத்தத்தத்தைக் குறித்து அவன் அவிசுவாசமாய் சந்தேகப்படாமல், “வாக்குத்தத்தம் பண்ணினவர் அதை நிறைவேற்றவல்லவர்” என்று முழு நிச்சயமாய் நம்பி, தேவனை மகிமைப்படுத்தி, விசுவாசத்தில் வல்லவனானான். ஆகவே, நீங்களும் ஆபிரகாமைப்போல உங்கள் விசுவாசத்தை கர்த்தர் மேல் உறுதிபடுத்திக் கொள்ளுங்கள். இந்த விசுவாசம், நம்பிக்கை உங்களுக்குள் வருவதற்கு நீங்கள் வேத வசனத்தை தினமும் கருத்தாய் வாசித்து தியானிக்க வேண்டும். ஏனெனில், வேத வசனத்திற்கு வல்லமை உண்டு. “அடுத்து என்ன செய்வதென்று தெரியவில்லையே” என்று கண்ணீரோடு இருக்கும் சூழ்நிலையில், நாம் வேதத்தை எடுத்து வாசித்தால், கர்த்தர் நம்மோடு பேசுவார். அதைத் தொடர்ந்து, அவரோடு ஜெபத்தில் ஒருமித்து வாழ்வது! “தேவன் வாக்குத்தத்தம் பண்ணினால், அதை அவர் நிச்சயம் நிறைவேற்றுவார்” என்று ஆபிரகாம் உறுதியாக நம்பினான். தன்னுடைய 100-வது வயதில் தேவ கிருபையால் அவன் ஒரு குழந்தையைப் பெற்றெடுத்தான். சாராளுக்கு ஸ்திரீகளுக்குள்ள வழிபாடு நின்று போன அந்த சூழ்நிலையிலும்கூட கர்த்தரை அவன் விசுவாசித்தினிமித்தம், அருமையான மகன் ஈசாக்கை அவர்களுக்கு குழந்தையாகக் கொடுத்து அவர்களை ஆசீர்வதித்தார்.

எங்களுடைய திருமண வாழ்க்கையிலே, ஆரம்ப காலத்தில் நாங்கள் எத்தனையோ காரியங்களுக்காக கர்த்தரை நோக்கி, வேத வசனத்தைப் பிடித்துக்கொண்டு ஜெபம்பண்ணியிருக்கிறோம். முதலாவது குறைவு, எங்களுக்கும் குழந்தை இல்லாத சூழ்நிலை! முதல் குழந்தை மூன்றாவது மாதத்திலே, வயிற்றிலே கலைந்துபோயிற்று. இரண்டாவது குழந்தை பத்து

மாதம் முழுவதுமாக சுமந்த குழந்தை! சகோதரர் தினகரனைப் போலவே இருந்த அந்த அழகான ஆண் குழந்தை வயிற்றிலேயே மரித்துப்போன நிலையில் பிறந்தது. எல்லோராலும் நாங்கள் பரிகசிக்கப்பட்டோம். ஆனால், நாங்கள் இருவருமோ ஒன்றுக்கும் கவலைப்படாமல், வேதம் சொல்லுகிறபடி, கர்த்தரை மாத்திரம் நோக்கிப் பார்த்தோம். ஜெபத்திலே அவரோடு பேசினோம். அதினிமித்தம் ஆண்டவர் ஏற்ற சமயத்தில் அருமையான ஓர் பாலகனைக் கொடுத்தார். அது தான் நம்முடைய அன்பு மகன் டாக்டர் பால் தினகரன் ஆகும். இவ்வாறு வேதனையினூடே பெற்ற குழந்தை இன்றைக்கு எப்படியாய் தேவனுக்கு மகிமையான மகனாய் வாழ்கிறான் என்று பாருங்கள். அப்படித்தான் ஆண்டவர் உங்கள் கண்ணீரையும் கண்டு, உங்களுடைய ஜெபத்தையெல்லாம் கேட்டு, உங்களுக்கும் நல்ல முறையில் ஆசீர்வாதம் கொடுப்பார்.

## சிறுமைப்பட்ட நிலைமையில் ஜெபத்தைக் கேட்பார்

இந்த உலகத்தில் யாவராலும் வெறுத்துத்தள்ளப்படுகிற சிறுமைப்படுகிற நிலைமை எவ்வளவோ சமயங்களில் வருகிறது. ஊழியத்தின் ஆரம்ப நாட்களிலே, பற்பல தேவைகள் நிறைந்த சூழ்நிலையில், எங்களுக்கு உதவி செய்வார் யாரும் கிடையாது. அப்படிப்பட்ட நேரத்தில் நாங்கள் சிறுமைப்பட்டவர்களாய் பலவிதமான மனவேதனைகளைக் கடந்து வந்தோம்.

> **சிறுமைப்பட்ட நிலையில் நீங்கள் ஆண்டவரை நோக்கிக் கூப்பிடும்போது, அவர் உங்கள் கூக்குரலைக் கேட்டு பதிலளிப்பார்**

**“தேசத்திலுள்ள எல்லா சிறுமையானவர்களே, கர்த்தருடைய நியாயத்தை நடப்பிக்கிறவர்களே, அவரை தேடுங்கள்; நீதியைத் தேடுங்கள், மனத்தாழ்மையைத் தேடுங்கள்; அப்பொழுது ஒருவேளை கர்த்தருடைய கோபத்தின் நாளிலே மறைக்கப்படுவீர்கள்.”** (செப்பனியா 2:3)

இன்றைக்கு நீங்களும்கூட சிறுமைப்பட்ட நிலைமையில், “எனக்கு உதவி செய்ய யாருமில்லையே, என் பெற்றோர், நண்பர்கள் எல்லோரும்கூட என்னைக் கைவிட்டுவிட்டார்களே” என்ற வேதனையோடுகூட இருக்கிறீர்களா? உங்களுடைய சிறுமையிலிருந்து நீங்கள் மீட்கப்பட, ஆசீர்வாதம் பெற ஒரே வழி, “கர்த்தரைத் தேடுவது” மட்டுமே ஆகும்.

தாவீது பலவிதங்களிலும், பல சமயங்களிலும் மிகவும் சிறுமைப்பட்டவனாயிருந்தான். சவுல் அவனைக் கொன்றுபோடுவதற்காக பலவிதங்களில் முயற்சித்தான். அவனுடைய சொந்த மகன் அப்சலோம், அவனை ராஜ்யத்தைவிட்டே துரத்திவிட்டான். இப்படி தாவீதின் வாழ்க்கையை வேதத்தில் வாசித்துப்பார்ப்போமானால், சிறுமைப்பட்ட கண்ணீரின் நிலைமையில் பலமுறை பாடுபட்டான். ஆனால், அந்த நிலைமையிலும் அவன் எப்படி தேவனை தேடினான்? சங்கீதம் 23-ல் உள்ள ஒவ்வொரு காரியமும், அந்த ஆறு வசனங்களும் மணி மணியாக இருக்கிறது. அதில் அவன் சொல்லுகிற முக்கியமான காரியம், “கர்த்தர் என் மேய்ப்பராய் இருக்கிறார். நான் தாழ்ச்சியடையேன்” என்பதாகும். தாவீது தன்னுடைய சிறுமைப்பட்ட வாழ்க்கையின் மத்தியில், கர்த்தரோடு பேசினான். அவருடைய சத்தத்தை கேட்டான். ஒருமுறை, அவன் தன்னுடைய சொத்து, சுதந்திரம் எல்லாவற்றையும் இழந்த நிலைமையில், தேவனாகிய கர்த்தருக்குள்ளே தன்னை திடப்படுத்திக்கொண்டான் (1 சாமுவேல் 30:6). ஆகவே, இழந்த எல்லாவற்றையும் கர்த்தரால் திரும்பப்பெற்றுக் கொண்டான் (1 சாமுவேல் 30:19) என்று வேதத்தில் வாசிக்கிறோம்.

எனக்கு அருமையான தேவனுடைய பிள்ளைகளே, நீங்களும்கூட அவ்வாறே கர்த்தரைத் தேடுவீர்களேயானால் தாழ்ச்சியடைவதேயில்லை. இன்றைக்கு நீங்கள் கண்ணீரோடு, வேதனையோடு, சரீரப்பிரகாரமாகவோ அல்லது வாழ்க்கையில் பாடுகளின் மத்தியிலோ இருக்கலாம். ஆனால், ஆண்டவரை உங்களுடைய மேய்ப்பராக நீங்களும் கொள்வீர்களானால், நீங்கள் எதைக் குறித்தும் கவலைப்பட வேண்டிய அவசியமேயில்லை. “ஆண்டவரே, இவ்வளவு நாட்களும் நான் உம்மோடு பேசவில்லையே, உம்மைத் தேடவில்லையே, இன்றைக்கு நீர் என் மேய்ப்பராய் மாறும்” என்று ஒரு நிச்சயமான தீர்மானம் எடுங்கள். நான் என்னுடைய 16-வது வயதில் அவ்வாறாக ஆண்டவரை என் சொந்த இரட்சகராகத் தெரிந்து கொண்டேன். அன்றிலிருந்து இன்றுவரை அவரே எனக்கு போதுமானவராயிருக்கிறார்.

**“கிறிஸ்துவும் உங்களுக்காக பாடுபட்டு, நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்து வரும்படி உங்களுக்கு மாதிரியை பின்வைத்துப் போனார்”** (1 பேதுரு 2:21)

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவும்கூட நமக்கு மாதிரியாக விளங்குகிறார். அவர் பிதாவின் குமாரன். அவர் ஜெபம்பண்ண வேண்டிய அவசியமே இல்லை. ஆனால், உங்களுக்கும் எனக்கும் மாதிரியாக இருக்க வேண்டும் என்பதற்காக அவர் தமது பிதாவை நோக்கி பல நேரங்களில் ஜெபம் பண்ணினார். அவர் அதி

காலையில் இருட்டோடே எழுந்து வனாந்தரத்திற்குப் போய் ஜெபம்பண்ணினார் (மாற்கு 1:35). மாலை வேளைகளிலும், இரவு முழுவதும் ஜெபம் பண்ணி னார் என்று வேதத்தில் வாசிக்கிறோம் (யோவான் 14:23; லூக்கா 6:12).

அன்பானவர்களே, இன்று நீங்கள் சிறுமைப்பட்ட நிலைமையில் இருக்கிறீர்களா? குடும்பத்தினரால் நண்பர்களால் தள்ளப்பட்ட நிலைமையில் மன முடைந்துபோய் இருக்கிறீர்களா? ஆண்டவர் உங்க ளுடைய சிறுமைப்பட்ட நிலைமையில், உங்கள் கூக்குரலைக் கேட்பார். அவ்வாறு கூப்பிடும் வேளை யில், உங்கள் தேவைகள் அனைத்தையும் அவர் நிறைவேற்றுவார்.

## பரிசுத்த ஆவியானவரால் இரட்சிப்பு

**“நசரேயனாகிய இயேசுவை தேவன் பரிசுத்த ஆவியினாலும் வல்லமையினாலும் அபிஷேகம் பண்ணினார்!”** (அப்போஸ்தலர் 10:38)

பரிசுத்த ஆவியின் அபிஷேகம் என்பது, தேவன் கொடுக்கிற ஆவிக்குரிய ஆசீர் வாதம். இன்றைக்கு எத்தனைபேர் குடும்பமாய் அபிஷேகம் பெற்றிருக் கிறீர்கள்? எங்கள் குடும்பத்தில், நாங்கள் ஆரம்பத்தில் சாதார ணமாக ஆராதனைக்கு செல்லு வோம். அப்படிப்பட்ட சமயத்தில் கர்த்தர் எங்களைத் தேடி வந்து ஆசீர்வதித்தார். முதலாவது குடும்ப ஜெபவேளையில் தேவன் என்னுடைய கணவருக்கு தரிசனமாகி, அவரை பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தினால் நிறைத்தார். அன்று முதல் இயேசு அழைக்கிறார் ஊழியத்தை அவரு டைய பொறுப்பிலே ஒப்புக்கொடுத்தார். பரம பிதா தம்மிடத்தில் வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்கு பரிசுத்த ஆவியைக் கொடுப்பது அதிக நிச்சயமல்லவா? என்று வேதத்தில் வாசிக்கிறோம் (லூக்கா 11:13). ஆண்டவர் இயேசு மரித்து உயிர்த்த பிறகு, தம்மோடு கூட இருந்த சீஷர்களுக்கு பரிசுத்த ஆவியைப் பெறுவது எவ்வளவு அவசியம் என்பதை கற்றுக்கொடுத்தார்.

**“ஆகையால் நீங்கள் எருசலேமை விட்டுப் போகாமல் என்னிடத்தில் கேள்விப்பட்ட பிதாவின் வாக்குத்தத்தம் நிறைவேற காத்திருங்கள் என்று கட்டளையிட்டார்”** (அப்போஸ்தலர் 1:5)

என்னுடைய மகன் பால் தினகரன் சில ஆண்டுகள் கர்த்தரைத் தேடாமல் படிப்பில் குறைவுபட்டான். அவனுக்காக பெற்றோராகிய நாங்கள் ஆண்டவரு டைய பாதத்தில் காத்திருந்து ஜெபித்தோம். பரிசுத்த ஆவியானவர் அவனை மேற்கொண்டார். அவன் ஆண்டவரை தன்னுடைய இரட்சகராக ஏற்றுக் கொண்டு, தேவ கிருபையால் அபிஷேகம் பெற்ற பிறகு, ஆண்டவரை அதிகமாய் தேடி, அவரோடு பேச ஆரம்பித்தான். “ஆண்டவரே எனக்கு ஒன்றுமே தெரியாது, நீர் எனக்கு போதித்து வழிநடத்தும்” என்று ஜெபத்தில் காத்திருந்தான். என்ன ஆச்சரியம் பாருங்கள், வெகு சீக்கிரத்தில், கர்த்தருடைய ஆசீர்வாதத்தோடு பற்பல பட்டங்களை பெற்றான். இன்றைக்கு கர்த்தர் தமக்கு மகிமையாக எவ்வள வாய் அவனை உயர்த்தி வைத்திருக்கிறார்! இதற்கெல் லாம் காரணம், அவன் பரிசுத்த ஆவியினால் நிறைந் திருந்தான்.

**விசுவாசத்தோடு கர்த்தரை நோக்கிக் கூப்பிடுவீர்களானால், அவர் உங்கள் இல்லாமைகளை இருக்கிறவைகளாக மாற்றுவார்**

அன்பானவர்களே, உங்கள் இருதயத்தின் ஆழ மும் அவருக்கு நன்றாகத் தெரியும். ஆகவே, முதலாவது அவரை “இரட்சகராக தேடுங்கள்”. “ஆண்டவரே, என் பாவங் கள், அக்கிரமங்கள், கெட்ட சிந்தனைகள் யாவற்றை யும் உம்முடைய இரத்தத் தினால் கழுவி என்னை சுத்திகரியும், நீர் சிலுவை யில் சம்பாதித்துக் கொடுத்த இரட்சிப்பை எனக்குத் தாரும்” என்று இருதயத்தின் ஆழத்தி லிருந்து கேட்பீர்களா? ஒருவராவது கெட்டுப்போவது அவருக்கு சித்தமல்ல. பயபக்தியோடு அவரைத் தேடும்பொழுது அவரே தமது கரம் நீட்டி உங்களை ஆசீர்வதிப்பார். கண்ணீரி லும், கவலையிலும், வேதனையிலும் பலவிதமான தேவைகளோடு இருப்பீர்களானால், கர்த்தர் இப்பொ ழுது உங்களுக்கு அவைகளிலிருந்து விடுதலை தருவார். உங்கள் கண்ணீர் யாவையும் துடைப்பார். நீங்கள் அவரைத் தேடும்பொழுது அவர் உங்களை ஆசீர்வதிப்பார். சிறுமைப்பட்டிருக்கிற நீங்கள் பரிசுத்த ஆவியினால் நிரம்பும்பொழுது எல்லாத் தீமையி னின்றும் உங்களை விடுதலையாக்குவார்.

ஆண்டவரோடு பேசுவது இன்பமும், ஆசீர்வாதமு மான காரியம். இதை வாசிக்கிற நீங்கள் ஒவ்வொரு வரும் பயபக்தியோடுகூட அவரை அனுதினமும் தேடி, அவரோடு பேசுங்கள். கர்த்தர் உங்கள் ஜெபங்களை யெல்லாம் கேட்டு, உங்கள் வாழ்வை சம்பூரண நன்மைகளால் நிரப்புவார்!



# இன்றைய இறை தியானம்

## செப்டம்பர் - 2025

1 **அப்போஸ்தலர் 2:17 - பரிசுத்த ஆவியானவர்**
**தியானத்திற்கு:** ஏசாயா 44:3; யோவான் 3:34; அப். 2:17,18; தீத்து 3:7

2 **சங்கீதம் 20:4 - தேவன் உங்கள் விருப்பங்களை நிறைவேற்றுவார்**
**தியானத்திற்கு:** 1 இராஜா. 11:31-37; சங்கீதம் 37:4,5; எபே. 3:20

3 **சங்கீதம் 118:14 - கர்த்தர் நம் பெலன்**
**தியானத்திற்கு:** யாத் 15:2; ஏசாயா 12:2; 49:5; எரே. 16:19; எபே. 6:10

4 **ஏசாயா 60:14 - கர்த்தருடைய நகரம்**
**தியானத்திற்கு:** ஏசாயா 48:2; 52:1; 62:12; சக. 8:3; வெளி. 21:10

5 **சங்கீதம் 118:5 - விசாலமான இடம்**
**தியானத்திற்கு:** 2 சாமு. 22:20; யோபு 36:16; சங். 18:19; ஆமோஸ் 9:6

6 **ஏசாயா 58:14 - கர்த்தரில் மகிழ்ச்சியாயிருங்கள்**
**தியானத்திற்கு:** லேவி. 23:40; ஏசாயா 35:10; ஆபகூக் 3:18; பிலி. 1:25,26

7 **சங்கீதம் 104:4 - அக்கினி ஜுவாலை**
**தியானத்திற்கு:** ஏசாயா 43:2; தானி. 7:9; அப். 7:30; வெளி.19:12

8 **ஏசாயா 57:15 - பரிசுத்த ஸ்தலம்**
**தியானத்திற்கு:** 1 நாளா. 28:10; சங். 20:2; 96:6; ஏசாயா 8:14; எசே. 37:28

9 **சங்கீதம் 89:17 - கர்த்தருடைய தயவினால் உயர்வு**
**தியானத்திற்கு:** ஆதி. 32:10; 39:4,21; உபா. 33:23; அப். 27:24

10 **ஏசாயா 54:3 - நீங்கள் பெருகுவீர்கள்**
**தியானத்திற்கு:** ஆதி. 16:10; உபா. 30:5; எசே. 36:37; எபி. 6:14

11 **ஏசாயா 62:3 - கிரீடம்**
**தியானத்திற்கு:** சங். 132:18; சக. 9:16; யாக். 1:12; வெளி. 2:10

12 **ஏசாயா 32:18 - நிலையான வாசஸ்தலம்**
**தியானத்திற்கு:** லேவி. 26:11; 1 இராஜா. 8:12-14; சங். 132:13,14; வெளி 21:3

13 **சங்கீதம் 66:12 - கர்த்தர் உங்களை செழிக்கச் செய்வார்**
**தியானத்திற்கு:** 1 நாளா. 4:40; சங், 65:9-13; நீதி. 11:25; அப். 14:17

14 **ஏசாயா 27:3 - கர்த்தர் நம்மை காப்பாற்றுகிறவர்**
**தியானத்திற்கு:** உபா. 33:12; யோசுவா 24:17; 1 நாளா. 18:6; சங். 12:7

15 **சங்கீதம் 51:12 - கர்த்தருடைய இரட்சணியம்**
**தியானத்திற்கு:** 2 சாமு. 22:3; சங். 67:1; லூக்கா 2:32; வெளி 19:1

16 **ஏசாயா 8:18 - அற்புத அடையாளங்கள்**
**தியானத்திற்கு:** உபா. 26:8,9; சங். 78:43; தானி. 6:27; அப். 4:30

17 **சங்கீதம் 44:5 - உங்கள் சத்துருக்கள் விழுவார்கள்**
**தியானத்திற்கு:** யாத். 23:27; லேவி. 26:7,8,36; உபா. 33:29; சங். 45:5

18 **யாத்திராகமம் 33:17 - சொன்னதை செய்பவர்**
**தியானத்திற்கு:** எண். 23:19; சங். 33:9; ஏசாயா 44:24; ஆமோஸ் 9:12

19 **சங்கீதம் 40:1 - கர்த்தர் நம் கூப்பிடுதலைக் கேட்கிறார்**
**தியானத்திற்கு:** 2 சாமு. 22:7; நெகே. 9:9; சங். 145:19; ஏசாயா 30:19

20 **எபிரெயர் 6:10 - நம்மை மறவாத தேவன்**
**தியானத்திற்கு:** 1 சாமு. 1:11-20; சங். 9:18; ஏசாயா 44:21; 49:15; ஆமோஸ் 8:7

21 **சங்கீதம் 37:18 - கர்த்தர் நம்மை அறிந்திருக்கிறார்**
**தியானத்திற்கு:** சங். 139:1,2; நாகூம் 1:7; லூக்கா 16:15; அப். 15:8

22 **மத்தேயு 10:41 - கொடுங்கள் கொடுக்கப்படும்**
**தியானத்திற்கு:** மாற்கு 4:24; லூக்கா 6:38; 2 கொரி. 9:6-8

23 **சங்கீதம் 36:9 - கர்த்தர் நமக்கு வெளிச்சமாயிருக்கிறார்**
**தியானத்திற்கு:** ஏசாயா 60:19; யோவான் 1:1-9; அப். 13:47; 1 யோவான் 1:5

24 **2 சாமுவேல் 7:9 - கர்த்தருடைய நாமம்**
**தியானத்திற்கு:** ஏசாயா 54:5; ஆமோஸ் 4:13; சகரியா 10:12; லூக்கா 1:49

25 **சங்கீதம் 36:8 - தாகம் தீர்க்கிறவர்**
**தியானத்திற்கு:** நெகே. 9:15,20; ஏசாயா 55:1; யோவான் 4:14; வெளி. 21:6

26 **யோவான் 15:15 - கர்த்தர் நம் சிநேகிதர்**
**தியானத்திற்கு:** நீதி. 8:17; ஏசாயா 43:4; எரே. 31:3; மத்.26:50

27 **சங்கீதம் 20:2 - கர்த்தர் உங்களை ஆதரிக்கிறவர்**
**தியானத்திற்கு:** ஆதி. 48:15,16; 2 நாளா. 32:22; சங். 146:9; அப். 13:17-20

28 **லூக்கா 12:7 - நீங்கள் விசேஷித்தவர்கள்**
**தியானத்திற்கு:** ஆதி. 49:3; யாத். 33:16; மத்தேயு 6:25,26; 10:31

29 **சங்கீதம் 25:9 - கர்த்தர் தமது வழியைப் போதிக்கிறார்**
**தியானத்திற்கு:** 1 இராஜா. 8:36; சங். 27:11; 143:10; ஏசாயா 48:17

30 **30. எரேமியா 31:25 - சம்பூரணம்**
**தியானத்திற்கு:** சங். 36:8; யோவேல் 2:26; ரோமர் 15:29; 2 கொரி. 9:8



இன்றைய ஆசீர்வாதத்திற்காக Dr. பால் தினகரன் மற்றும் குடும்பத்தினர் இந்த சத்தியத்தை விளக்கி ஜெபிப்பதைக் காணுங்கள்

இணையதளம்: www.jesuscalls.org/ta/dpv
ஃபேஸ்புக்: Jesus Calls Tamil
www.familychannel.org

Printed by G.L.B.Ernest and Published by G.L.B.Ernest on behalf of Jesus Calls and Printed at Rasi Graphics Private Limited, DP 69-71-A, Sidco Industrial Estate, Thirumazhisai, Poonamallee Taluk, Thiruvallur District.
and published at 16, Dr. D.G.S. Dhinakaran Salai, Chennai - 28, Editor: G.L.B.Ernest




# 15,000 மாணவ மாணவியருக்கு ஒளிமயமான எதிர்காலம்





2025 ஜூலை 26ம் தேதி மகிழ்ச்சியும் எதிர்பார்ப்பும் நிறைந்த அற்புத மான மாலைவேளையாக அமைந்தது. இந்தியா முழுவதும் இருக்கும் 15,000 ஏழைப் பிள்ளைகளுக்கு சீஷா மூலமாக ஸ்கூல் கிட் வழங்கும் நிகழ்வு அன்று ஆரம்பித்தது. தொடக்கத்தில் காருண்யா நிகர்நிலைப் பல்கலைக்கழக துணை தலைவரும், இயேசு அழைக்கிறார் ஊழியத்தின் துணை தலைவருமான சகோ. சாமுவேல் தினகரன், சீஷாவின் அறங்காவலரான Dr. ஷில்பா சாமுவேல் தினகரன் ஆகியோர் 600 மாணவ மாணவியருக்கு ஸ்கூல் கிட்டுகளை வழங்கி ஆரம்பித்து வைத்தனர்.

6 கற்றல் மையங்களில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில், 10 மற்றும் 12ம் வகுப்புகளில் உயர் மதிப்பெண் பெற்ற மாணவ மாணவியருக்கு ரொக்கப் பரிசு வழங்கப்பட்டது.

## மகிழ்ந்த இருதயம்

கொண்டாட்டங்களின் உண்மையான மகிழ்ச்சி அதன் பிரமாண்டத்தில் அல்ல; எளிய மக்களோடு பகிர்ந்துகொள்ளும் செய்கையில் இருக்கிறது. உதவி செய்து ஒருவரை புன்னகைக்க வைப்பதே முக்கியம். புத்தாடைகள், தேவையுள்ள சிறுபிள்ளைக்கு மகிழ்ச்சியையும் திடநம்பிக்கையையும் அளிக்கின்றன. ஆகவேதான், இந்தியா முழுவதும் ஆண்டுதோறும் நலிவுற்ற பின்னணியை சேர்ந்த பிள்ளைகளுக்கு சீஷா புத்தாடைகள் வழங்கி மகிழ்ச்சியையும் கௌரவத்தையும் அளிக்கிறது.

---

## வெற்றிக் கதை



என்னுடைய பெற்றோர் தினக்கூலி வேலை செய்தாலும், என்னை படிக்க வைத்தனர். சீஷாவின் கற்றல் மையத்தில் என்னை சேர்த்தனர். நான் இந்த ஆண்டு 12ம் வகுப்பு தேர்வில் 507/600 மதிப்பெண்கள் பெற்றேன். தென்னிந்தியாவில் சீஷாவின் கற்றல் மையங்களில் படிக்கும் 86 மாணவ மாணவியருள் அதுதான் முதல் மதிப்பெண். அதற்காக சீஷா எனக்கு ரூ.5,000/- ரொக்கப் பரிசும் பதக்கமும் கொடுத்தது. சீஷா அளிக்கும் ஆதரவுக்கு நன்றி.

செல்வி A. ரீனா, கற்றல் மைய பயனாளி, கடலூர்.


**சிறுநன்கொடை மூலம் சிறுபிள்ளைகளின் மகிழ்ச்சிக்கு நீங்கள் காரணமாகலாம்.**

* ஒரு சிறுபிள்ளைக்கு புத்தாடை வழங்க ரூ.500/-
* 5 சிறுபிள்ளைகளுக்கு புத்தாடைகள் வழங்க ரூ.2,500/-

DONATE TO SEESHA

TAX-EXEMPTED

UPI ID : 9384015155@okbizaxis

G Pay PhonePe Paytm UPI pay
Wallets
MobiKwik Freecharge JioMoney

You can also donate through: https://seesha.app

044 66660000
+91 9300 600 600
www.seesha.org
info@seesha.org
* When you Donate send the Details to +91 9300 600 600
SEESHA house No.37, Gandhi Road, Tambaram (West), Chennai - 600045

REGISTERED NEWSPAPER RNI No.TNTAM/2003/10418


# Karunya

DEEMED UNIVERSITY
SOLVING HUMAN PROBLEMS
NAAC Accredited A++

Accreditation: A++ NAAC | ACCA | NBA

India Rating: PLATINUM QS I-GAUGE

Global Ranking: THE World University Rankings 2025

CATEGORY 1 Institution UGC Gol.

## Admissions 2025
*Closing Soon*

## *Agriculturist with noble minds*

Accredited by ICAR Indian Council of Agricultural Research

# School of AGRICULTURAL SCIENCES

### Programs Offered
- **B.Sc. (Hons.)** Agriculture
- **M.Sc. (Agri.)** Agronomy, Genetics & Plant Breeding
- **M.Sc. (Hort.)** Fruit Sciences
- **Ph.D.** All Agricultural & Horticultural Sciences

### Facilities / Highlights
- 329 acres of Instructional & Research farm
- Rose Garden with 60 varieties, Medicinal Garden with more than 100 plant species, Butterfly Garden & Ornamental cafeteria
- Orchard with 23 Fruit crops and Nursery
- Crop cafeteria with important varieties
- Hi tech farming with 1000 m2sq. Polyhouse, Shade net, Mist chamber
- Eleven Well Equipped and Spacious Lab
- Thirteen Entrepreneurship Modules
- Spacious classrooms with Smartboard or LCD facilities
- B-Class Agromet Observatory & Automatic weather station
- Fifteen acres of international standard indoor and outdoor sport facilities



### Our Major Recruiters:

Programs Offered : ENGINEERING | AGRICULTURE | MANAGEMENT | ARTIFICIAL INTELLIGENCE | COMMERCE | FORENSIC SCIENCE | DIGITAL SCIENCES | HEALTH SCIENCES | MEDIA | ONLINE MBA

## Karunya Institute of Technology and Sciences,
Karunya Nagar, Siruvani Main Road, Coimbatore - 641 114, Tamil Nadu, India.
E-mail: admissions@karunya.edu • Website: www.karunya.edu
**Toll Free: 1800 88 99 888, 1800 42 54 300**
**For more details contact: 94425 03407, 94425 03422**

APPLY NOW!
Scan QR Code to Start the Admission Process